Ims03 77-3

திருச்செங்கார் ஸ்தலபுராண

வசனச் சுருக்கம்



உ

ஓம்.

சரவணபவ.

முகவுரை.

இத்தலைப்பெயர்பூண்ட இப்புராணம் ஏற்கனவே இதற்குமுன் பற்பல உளவாயினும் இத்தகைமையுடைய எளிய தமிழ் நடையில் சுருக்கி, கற்றாருக்கும் கல்லாதாருக்கும் வெளிப்படையாய் அர்த்தபாவமாகி மனப்பதிவாகும்பொருட்டு சுருக்கமாக அடக்கியெழுதி அச்சிட்டிருந்தால் மிக்க உபகாரமாயிருக்குமென அனேக புண்யவான்களின் கோரிக்கைக் கிணங்கி அவ்வாறே என் சிற்றறிவிற்கெட்டியமட்டும் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமியின் திருவருளே துணையாகக்கொண்டு இச்சிரியவசனபுராணத்தை பற்பல கிரந்தங்களினின்றும் சுருக்கமாக யெழுதி அச்சிற்பதிப்பிவித்து வெளியிடலானேன். இதிற்சொற்குற்றம் பொருள்குற்றம் ஏதேனும் புலப்பட்டு தெரிவிப்பவர்களுக்கு அனேக கோடி வந்தனம் சமர்ப்பித்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளச் சித்தமாயிருக்கிற

அன்பர்க்ளுக்கன்பன்

☞ S. துரைஸாமி அய்யர்.

6-80

உ

முருகன்றுணை.

திருச்செந்தூர் ஸ்தலபுராண வசனச் சுருக்கம்.

திருசெந்தூர் ஸ்தல விசேஷம்

விருத்தம்.

பாரினிலனைத்தும் போற்றும் பன்னிருகையன் வாழும்
சீர் பெறத்தவங்களோங்குஞ் செந்திமா நகரைப்போல
பேர்பெறும் ஸ்தலங்களில்லை பிறப்பினுமறிவாரில்லை
ஆர்படைவீட்டுக்கெல்லாமரும்பொருளமைந்ததன்றே.

கலித்துறை.


சேயோனைச்செந்திவிற் சேவகன்றன்னைச் செகத்தினுக்
தாயோனை வேலனை ஷண்முகதேசிக தற்பரனை [கோர்
மாயோனைச் சூரனை வஞ்சவசுரரை மார்பிளந்த
தூயோனையன்றி என்னுருயிர்க்கேற்ற துணையில்லையே.

வெண்பா.

அகலும் பிணியனைத்து மாதங்க நீங்கு
மிகலுமே நட்பாயியங்கும்—புகல
யிகலோகத் தெங்குமிணையில்லாத செந்திற்
குகன்ருள் பணியுமவர்க்கு.

திருச்செந்தூரின் ஸ்தலபுராண மகத்துவம்.

இப்புராண காவியத்தை எவ்வீடுகளில் வைத்து பூஜை பண்ணி வந்தாலும் படித்து வந்தாலும் அவ்வீடுகளிலிருக்கும் தெருவிலேயே யாதொரு வியாதிகளும் சம்பவியாது. * யமபயமும் நேரிடாதென ஸ்ரீசுப்ரமண்யக்கடவுளே சிலருக்குக் கனவிலெழுந்தருளிச் சொல்லி மறைந்திருக்கிறார் என்பது இப்புஸ்தகம் 7-வது பக்கம் 2-வது வரியில் இந்த § மார்க்கு அடையாளத்திலிருந்து தெளிவுறும்.



திருச்செந்தூர் ஸ்தலபுராண் ஆதி ஆசிரியர் வென்றிமாலை ஐயர் சரித்திரம்.

இவர் பிராமணகுலம். இவர் திருச்செந்தூரில் ஸ்ரீ சுப்ரமண்யஸ்வாமி ஆலயத்தில் மடைப்பள்ளி வேலையிலிருந்தனர். ஒரு நாள் நைவேத்யந்தயார் செய்ய காலஹரணமாகவே, கோயில் ஸ்தானதிபதிகளாகிய அதிகாரிகளாலே துன்பப் படுத்தப்பட்டார். அத்துன்பம் ஸகிக்கமாட்டாமல் அம்முருகக்கடவுளைத் தியானித்தவராய் அவ்வாலயஞ் சமீபத்தின் கண்ணேயுள்ள கடலிலேயே விழுந்துயிர் துறக்கத்துணியவே ஸ்ரீமுருகக் கடவுள் பிரத்யக்ஷமாகி இவ்வேதியரினிருகாங்களையும் பிடித்துக்கொண்டு "பிராமணோத்தமனே! யாதுக்கும் பயப்படவேண்டாம். எம்மால் இந்த ஸ்தலம்

---

* யமபயம் = மரணாவஸ்தை.

மிக்க மான்மியமுளது. நெல்லைமா நகரமென்னும் திருநெல்வேலிக்கருகாமையாயுள்ள சேவ்வல் என்னும் கிராமத்தில் கிருஷ்ணசாஸ்திரி என்கிற பிராமணனிடம் சென்றால் வடநூலிலுள்ள ஜெயந்திபுரமான்மியத்தைத் தமிழில் மொழிபெயர்த்துத் தருவார். தக்ஷணமே உனக்கும் பாடுதற்கு வாக்குண்டாகுமென" சொல்லி மறைந்தனர். உடனே ஸ்ரீ முருகக்கடவுளின் திருவாக்கைத் தலைமேற்கொண்டு அவ்வண்ணமே சாஸ்திரியாரிடம் சென்று தெரிவிக்க அவரும் மன மகிழ்ச்சியோடு திருச்செந்தூர்ஸ்தல மான்மியத்தைமொழிபெயர்த்துக் கொடுக்க உடனே இவருக்கும் பாடுதற்கு வாக்குண்டாய் சொற்பொருளின்பச் சுவையோடு இனிய தமிழ்பாடல்களாகப் பாடவே சாஸ்திரியார் இவருக்கு "வென்றிமாலைக் கவிராஜரென்னும்" திருநாமம்கொடுத்தனர். கவிராஜர் மிக்க மனக்களிப்புடன் திருச்செந்தூர் சுவாமி சன்னிதானத்தில் அரங்கேற்றவரவே, திரிசுதந்தரப்பிராமணர்கள் இவர்வரவை யறிந்து மடைப்பள்ளி வேலைக்காரனுவது பாடவாவது ஆடவாவது இஃதென்ன ஆச்சரியம் என இவரை இகழவே, கவிராஜர் பயந்து கடலிலே புராணத்தைக்கட்டிச் சுருட்டி எறிந்துவிட்டனர். பனை ஓலைகளில் யெழுதப்பட்ட அவ்வேடுகள் அலைகளால் ஈழ தேசத்துறை முகத்திலொதுக்கப்படவே ஆங்கொருவன் அவ்வேடுகளைஎடுத்துத் தன் வீட்டில் வைத்து பிரதிதினமும் படித்து வந்தான். அவன் படித்துவரும் அவ்வீதியில் மாத்திரம் சக்கரகவாலம் என்னும் சுழல்காற்று வீசாமலும் அத்தெருவின் கண் வசிக்கும் ஜனங்கள் இறவாமலுமிருக்

கிற காரணம் யாதெனவென்னைக்கொண்ட அவ்வூரார் கனவில் ஸ்ரீ குமாரக்கடவுள் எழுந்தருளி § "நம் ஸ்தல புராணம் இருக்குந் தெருவுக்கே எப்பொழுதும் க்ஷேம முண்டாகுமென்றும் புராணம் வந்த வரலாறும் ஆங்கு அதை வைத்திருப்பவன் பெயருஞ்சொல்லி" மறைந்தனர். "உடனே அவ்வூராரெல்லாரும் நித்திரையினின்றெழுந்து விசாரித்துத் தெளிந்து அதுமுதல் ஆங்கொவ்வொருவரும் தனித்தனியே அவ்வேட்டுப் புராணத்தினின்றும் ஒவ்வொரு பிரதி எழுதி தங்கள் தங்கள் விடுகள்தோறும் வைத்துப் படித்துப் பூசித்து வரவே அதுமுதல் அவர்கள் எவ்விதக் குறைவுமின்றி வாழ்ந்துகொண்டிருந்தனர்.

ஆதி புராண ஆரம்பம்.

நைமிசாரண்யத்தில் அனேக மகரிஷிகள் வந்து கூடியிருக்கும் சமயத்தில் சூதமுனிவர் எழுந்தருளியிருக்கக்கண்ட அம்முனிவரனைவரும் எழுந்து சூதமுனிவரை பூஜித்து, உபசரித்து, "சுவாமி! பதினெண் புராணங்களுள்ளும் ஸ்தலம், தீர்த்தம், மூர்த்திமுதலிய ஒவ்வொன்றாலும் அடையும் பலன்களை அருளிச்செய்தீர், அவற்றுள் ஸ்ரீ சுப்ரமண்யக்கடவுள், தாரகாசுரன் முதலான அனேக அசுரர்களைக் கொன்று, ஜெயந்திமாநகரமென்னுந் திருச்செந்தூரி லெழுந்தருளியதையும், கந்தமாதனமென்னுஞ்சந்தனசலம் அவ்விடம் வந்ததையும் விரித்துச் சொல்லியருள வேண்டுமென" வேண்டினர். உடனே சூதமுனிவர் தமது தலையின் மேலிரண்டு காங்

களையும் குவித்துக்கொண்டு நீங்கள் வினவியதிருச்செந்தூர் ஸ்தலமாகாத்துவம் முற்காலத்தில் வியாஸ மகா முனிவர் சுகப்பிர்ம ரிஷிக்குபதேசத்தபடியே சொல்லுகிறேனெனச் சொல்லலுற்ருர்."



நாலே தடுமாறித் தட்டுக்கெட்டுக் கிடந்த வேதங்களை தன்னந்தனியே நான்கு பாகங்களாக ஒழுங்குப்படுத்தி சப்தலோகங்களுக்கு நிலைபெறச்செய்த ஸ்ரீ வியாஸமகாரிஷியானவர் கங்காநதியுற்பத்தி ஸ்தானத்திலே வரவே, சுகமுனிவர் அவரை கண்டெழுந்து வணங்கி "சுவாமி! தாம்பிரவன்னி நதியின் தென் பக்கத்தில் ஜெயந்திமா நகரமென்றொரு திவ்யமான புண்ய க்ஷேத்ரத்தின் சிறப்பையும் ஸ்ரீ முருகக்கடவுள் ஆங்கு எழுந்தருளி வந்திருந்த கதையையும் தொகுத்துச்சொன்னீர்; இனி அவைகளை விவரித்துச் சொல்லியருளவேண்டுமெனப்" பிரார்த்திக்க, வியாஸ முனிவர் பின்வருமாறு சொல்லத்தொடங்கினர்;—

1. ஸ்ரீ சிவசுப்ரமணியருக்குரிய ஜெயந்திமா நகரமென்னும் திருச்செந்தூரானது மோக்ஷவீட்டைத்திறப்பதற்கான ஓர் திறவுகோல்.

2. யமனுடைய பட்டணத்துக்குச் செல்லும் வழியை யடைக்கும் ஓர் கதவு.

3. அஷ்டாங்கயோகப் பயிற்சி யுடையவர்கள் இருதயத்தில் பிரகாசிக்கும் ஓர் விளக்கு.

4. ஆங்கு செய்யும் தருமமே ஒன்று கோடியாக விளையும்.

5. அம்முருகக்கடவுள் வசிக்கும் ஜெயந்தி புரத்தின் எல்லையைக் கடவாமலிருந்துகொண்டு வசிக்கும் மனிதர்களே மிக்க தவச்செயலுடையவராவார்.

6. ஜெயந்திபுரமே தேவருலகம்.

7. அஃதே காமம், குரோதம், லோபம், மோகம் மதம், மாச்சரியமென்னும் ஆறுவிதக்களைகளைக்களைந்து மோக்ஷத்தைக்கொடுக்கும் க்ஷேத்ரம்.

8. திருச்செந்தூரே எல்லா ஸ்தலங்களுக்கும்தலைமையான புண்யஸ்தலம்.

9. ஜெயந்திபுரமென்று ஓர் தரம் உச்சரிப்பவர்களுக்கு இனி மறு ஜெனனமே கிடையாது.

10. கங்காநதியிலே * திருவேணி † ஸங்கமத்திலே அடையும் பயனானது இஜ்ஜெயந்திமா நகரமென ஒரே முறை உள்ளன்போடு உச்சரிப்பவர் அடையும் பயனில் பதினாறிலொருபங்குக்கு நிகராகாது.

11. இஜ்ஜெயந்தி புறத்தி லிருந்துகொண்டு ஓர் தினையளவு புண்யம் செய்தாலும் அது மூன்றாம்பிறைச் சந்திரன்போல தினேதினே விருத்தியாய்க்கொண்டே வரும்.

12. (1) இயல்புக்கு விரோதமான புணர்ச்சிகளால் வரும் பாவமும்.

(2) §மாலினி கரணமென்னும் பாவமும்.

---

* திருவேணி = மூன்றுநதி.

† ஸங்கமம் = சந்திக்குமிடம்.

§ மாலினிகரணம் = நவபாதகங்களிலொன்று.

(3) தங்கள்பெற்ற புத்திரிகளை யிச்சித்தபாவமும்.

(4) தங்கள் மருமகளை விரும்பிய பாவமும்.

(5) கற்புடைய பெண்களின் கற்பழித்தபாவமும்.

(6) ஈனஜாதி ஸ்திரீகளைப் புணர்ந்தபாதகமும் ஜெயந்திபுரத்திற்கு அன்புடன் சென்று ஸ்ரீசுப்ரமண்ய மூர்த்தியை தரிசித்த நிமிஷமே சூரியனுக்கெதிற்பட்ட பனிபோல நீங்கிவிடும்.

13. கருமம், ஓமம், தானம், தமம், சமம், யாகம், கருமம், மந்திரம் முதலியவைகள் கொடுக்கும்பயன்கள் ஜெயந்திபுரத்தில் வசிப்பவர்கள் பெறும்பயனில் கோடியிலொருபங்குக்கிடாகாதென வேதங்களெல்லாம்முறையிடுகின்றன.

14. மிருகங்களானாலும், மனிதர்களானாலும் பறவைகளானாலும், ஊர்வன ஜந்துக்களானாலும் திருச்செந்தூரின் கண் சரீரத்தைவிட்டு உயிர் நீங்கினால் ஸ்ரீ குமாரக்கடவுளடியார்களின் பதவியை அடைவார்கள்.

15. இன்னும் தட்டுக்கெட்டுத் தடுமாறி யாவருயினும் வழிதெரியாமல் ஜெயந்திமா நகரஞ்சென்றவர்கள் ஸ்ரீ பாலசுப்ரமண்யமூர்த்தியின் திருவடிச்செல்வத்தை அடைவார்களென்பது சத்தியம்.

16. ஜெயந்திபுரத்தில் பிதுரு சிராத்தாதிகள்முதலியவை செய்தால் காசி க்ஷேத்திரத்தில் கயாதீரத்திலே செய்த சிராத்த பலனுக்கும் நூறுபங்கதிகமான பலன் கிடைக்கும்.

17. (1) தரித்திரத்தால் ஏகோதிஷ்டம், சபண்டீகரணம், ஊனமாஸீகம், வருஷாப்தீகம் முதலியவை வாங்கி யுண்பவர்கள் தோஷமும்,

(2) மதுபானஞ்செய்த தோஷமும்,

(3) குருபத்தினியைப் புணர்ந்த தோஷமும் ஜெயந்திபுரத்தில் வசிப்பவர்களுக்கு நீங்கிவிடும்.

18. நெடிய கடல்சூழ்ந்த இப்பூவுலகத்தின் கண்ணுள்ள காசி, காஞ்சீபுரம், சிதம்பரம், ஸ்ரீகாளத்தி, திருவாரூர், அருணாசலம், திருவானைக்கா, புருஷோத்தமாநகரம், திருச்செந்தூர், ஆகிய இவ்வொன்பது புண்ய தீர்த்தஸ்தலங்களுக்குள் திருச்செந்தூரே முதன்மையானது.*

19. நரகத்தில் அழுந்திவருந்துகின்றவர்களைப்பார்த்து கண்களில் தீப்பொறி பறக்க கோபித்து யமன் பின் வருமாறு அடிக்கடி சொல்லுவான்:—

(1) ஜெயந்திபுரத்தில் கந்தபுஷ்கரணி தீர்த்தத்திலேமூழ்கி ஸ்ரீகந்தக்கடவுளைவணங்காமல் வீண்ஜென்மமெடுத்து சோம்பேரிகளாய்த் திரிந்த வீணர்களே! நரகத்திலழுந்துங்கள்.

(2) ஜெயந்திமா நகரத்தில் வதனாரம்ப புஷ்கரணி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரீ வேலாயுத மூர்த்தியை தரிசிக்காத சரீரம் நரகத்திலேயே வசிக்கட்டும்.

---

* ஏனெனில்:—திருச்செந்தூரின் பஞ்சக் ரோசத்தெல்லைக்குள் உயிர்விட்டவர்கள் ஸ்ரீ சுபரமண்யக் கடவுளின் சாரூபத்தை அடைகிறார்கள்.

(3) மோக்ஷத்தை தரும் ஸ்தலமாகிய ஜெயந்தி புரத்திலப்போய் அம்முருகக்கடவுளை தரிசியாமலும் வாழ்நாளைக் கழித்துவிட்டீர்களே என்று மிக்க கருணை யினாலே யமன் சொல்லிய "ஜெயந்திபுரம்" என்ற வார்த்தையை அந்த நரகவாசிகள் கேட்டவுடனே நரகத்தை விட்டுக் கரையேறி மோக்ஷ உலகத்தை அடைந்தார்களென வியாஸமுனிவர் சுகரிஷிக்குச்சொன்னார். ஆகையால் ஜெயந்திபுரமென்னும் திருச்செந்தூரே சகல தீர்த்தங்களினும் சிறந்தது. யாவருக்கும் வேண்டிய இஷ்டகாம்யாதிகளைகொடுக்கும் தீர்த்தங்கள் ஆங்கு இருபத்திநான்கு உள்ளன. அவைகளின் பெயரும் மகிமையும் சொல்லுகிறேன் கவனியுங்களென்று நைமிசாரணிய வாசிகளாகிய முனிவர்களை நோக்கி சூதமுனிவர்சொல்லுகிறார்:—

காயத்திரி மந்திரமானது வேலாயுதக் கடவுளுக்கு எதிரே வந்து நின்றுகொண்டு ஸ்தோத்திரஞ் செய்து வணங்கி "சுவாமீ! என்னுடைய வடிவமாகிய இருபத்து நான்கு எழுத்துக்களும் இருபத்துநான்கு புண்ய தீர்த்தங்களாக இந்த ஸ்தலத்தின்கண் சமுத்திரத்தின் பக்கமே சிறப்புடன் வெவ்வேறு திருநாமம் பெற்று விளங்க வேண்டுமென" பிரார்த்திக்க, ஸ்ரீ ஷண்முகக் கடவுள் சந்தோஷித்து " அப்படியே ஆகுகவென " வரங்கொடுத்தனர். உடனே இருபத்துநான்கு எழுத்துக்களும் இருபத்துநான்கு தீர்த்தங்களாயின.

அவைகளாவன:—

1. முருகக்கடவுள் சன்னிதானத்துக்குமுன்னே

முகாரம்பதீர்த்தம் அல்லது வதனாரம்ப தீர்த்தம்.

மகிமை:—யாவர்க்கும் ஷண்முகக்கடவுளின் திருவருள் சிறந்திருக்கப்பெற்றது.,

2. தெய்வயானை தீர்த்தம்

மகிமை:—கவுரி, கங்கை, யமுனை, காவிரி முதலிய புண்ணிய தீர்த்தங்களிலும் சிறந்தது.

3. இலக்ஷ்மி தீர்த்தம்.

மகிமை:—வேத சுருதி, துங்கபத்திரை, குமரியாறு முதலிய நதிகளிலும் சிறந்தது.

4. சித்தர்தீர்த்தம்.

மகிமை:—வைகை, தேவகி, கண்டகை, கோதை முதலிய நதிகளின் ஸ்நான பலனை உடைத்தானது.

5. திக்பாலகர் தீர்த்தம்.

மகிமை:—தாமசி, சரயு, துர்க்கை, சுசோபனைமுதலிய நதிகளின் ஸ்நான பலனை உடைத்தானது.

6. ஷண்முகமூர்த்திக்குநேரே விளங்கும் காயத்ரி தீர்த்தம்.

மகிமை:—நருமதை, தசானை முதலிய நதிகளின் பலனையுடையது.

7. சாவித்ரி தீர்த்தம்.

மகிமை:—கோதாவரி, பெண்ணை, ஸரஸ்வதி, வேத்ரவதி முதலிய நதியின் பலனை தரக்கூடியது.

8. ஸரஸ்வதிதீர்த்தம்.

மகிமை:—சைவதரணி, மந்தாகினி, பலாகை முதலிய நதிகளின் பலனை கொடுக்கக்கூடியது.

9. ஆறுமுகக் கடவுளுக்கு எதிரே விளங்கும் அயிராவத தீர்த்தம்.

மகிமை:—சந்திரபதாகை, சிந்து, முதலிய நதிகளின் பலனை உடைத்தானது.

10. வயிரவ தீர்த்தம்.

மகிமை:—சோணையாறு, கம்பை முதலிய நதிகளின் பலனையொத்தது.

11. வள்ளி தீர்த்தம்.

மகிமை:—ஞானத்தைத் தரக்கூடியது.

12. ஸ்ரீவேலாயுத மூர்த்திக்கு முன்னே விளங்கும் துர்க்கை தீர்த்தம்.

மகிமை:—இம்மையின் துன்பத்தை யொழித்து மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியது.

13. ஸ்ரீ கந்தக் கடவுளுக்கு எதிரேயும் சமுத்திரத்தின் பக்கத்திலும் விளங்கும் ஞான தீர்த்தம்.

மகிமை:—துதிப்பார்க்கும், துதிக்கக் கருதுவார்க்கும் நல்வழியைக்காட்டும்.

14. ஸத்ய தீர்த்தம்.

மகிமை:—சகலவிதத் துன்பத்தையும் போக்கி, ஊழ்வினைத்தொடர்பையும் வேரறுத்து, செல்வப்பொருளையும் தரக்கூடியது.

15. சமுத்திரத்தின் பக்கமே விளங்கும் தர்மதீர்த்தம்.

மகிமை;—அடிபடிந்தாடினோர்க்கு வேண்டிய நற்பொருளனைத்தையுங் கொடுக்கும்.

16. முனிவர் தீர்த்தம்.

மகிமை:—நல்வினை, தீவினை யென்னுமிருப்பைக் குறைப்பதில் சிறந்தது.

17. தேவர் தீர்த்தம்.

மகிமை:— காம-குரோத-லோப-மோக-மத--மாச்சரிய முதலிய குற்றங்களைக் களைந்து ஜெகதீசனுடைய திருவடியை யடைய வேண்டிய ஞானத்தைக் கொடுக்கும்.

18. பாவநாச தீர்த்தம்.

மகிமை:—குற்றமற்ற முனிவர்கள் சாபத்தையும் நீக்கக் கூடியது.

19. கந்தபுஷ்கரணி தீர்த்தம்

மகிமை:—சிவபிரானது திருவடியிற் சேரும் வழியைக்காட்டக்கூடியது.

20. ஸேது தீர்த்தம்.

மகிமை:—ஷண்முகக்கடவுள் பாததாமரையைக் காட்டியருளும்.

21. கங்கா தீர்த்தம்.

மகிமை:—முக்த்திக்கு வித்தாகிய தேவாமிருதமாய் விளங்கும்.

22. கந்தமாதன தீர்த்தம்.

மகிமை:—ஜெகதீசனுடைய திருவடியை தரிசிக்கும் வழியைக்காட்டும்.

23. மாத்ரு தீர்த்தம்.

மகிமை:—பிதுரு தேவதைகள் திருப்தியடைய, எள்ளுந் தண்ணீருமிறைத்தவர்களுக்கு நன்னெறியைக் காட்டும்.

24. தென்புலத்தார் தீர்த்தம்.

மகிமை:—ஓர் தரம் மூழ்கி, கையில் எள்ளும் ஜலமும் எடுத்து இறைத்தவர்களுக்கு இம்மை மறுமை இரண்டிலும் சிறந்து விளங்கச்செய்யும்.

முக்கிய கவனிப்பு:—

1. பருவகாலம் அதாவது அமாவாசை பௌர்ணமி யென்ற இரண்டுகாலங்களிலும் வதனாரம்ப தீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணி ஷடாக்ஷரத்தை மனதில்தியானித்து ஸ்ரீ சுப்ரமண்யக்கடவுளை தரிசித்தவர்கள் கயிலாஸபதவியை அடைவார்கள்.

2. அந்தன்ன வருஷாம்பதீர்த்தத்திலே ஒருகாலம் ஸ்நானஞ்செய்து மூன்றுதரம் ஸ்ரீ சுப்ரமண்யக்கடவுளை வணங்குகின்றவர்கள், தேவர் முனிவருந்தம்மைத்தேடிவந் துவணங்கும் பதவியை அடைவார்கள்.

3. அங்கு மூன்றுகாலம் ஸ்நானஞ்செய்பவர் தேவேந்திரனும் தம்மை வணங்கும் பதவியை அடைவார்கள்.

4. புத்திரில்லாதவராயிருந்தாலும், அநாத மரணமுற்று அக்கினி மூட்டுதற்கிடமின்றிக் கிடந்தவராயினும், கந்தபுஷ்கரணியிலே அப்பிரேதத்திற்கு ஸ்நானம் செய்வித்து எள்ளுந்தண்ணீரும் பிதுருக்களுக் கிறைத்தால், அவர்கள் தேவேந்திர பதவியை அடைவார்களென்று வேதங்கள் முறையிடுகின்றன.

☞ மேற்கண்ட இவ்விருபத்துநான்கு தீர்த்தமகிமைகளை படித்தவர்களும், படிக்கக் கேட்டவர்களும், எட்டிலெழுதி வைத்தவர்களும், பூசித்தவர்களும், பூசிக்கச் சொன்னவர்களும் மெய்ம்மைப் பயனை யடைவார்களென்பது திண்ணம். சுபமஸ்து.

அசுரர்கள் செய்யுங்கொடுமையால் பிரமதேவன், தேவேந்திரன் முதலிய மற்றதேவர்களெல்லாம் தம்தம் பதவி, தவம், வேதம், மானம் முதலியவைகளை இழந்து கயிலாசகிரி மலையில் பார்வதி சமேதராயிருக்கும் பரமசிவன் திருவடியை வணங்கி சுவாமி! நீர் பார்வதி தேவியாருடன் வெகுகாலம் போகத்திலிருந்த காரணம் யாது பற்றியோ? அந்த போகத்தின் பாரம் பொறுக்கமுடியாமல் பூமிதேவியுந் தளர்ச்சியடைவதைச்சொல்லும்போதே நாங்கள் துன்பத்தையடைகிற

படியால் ஓர் விமோசனஞ் செய்யவேண்டுமெனப் பிரார்த்திக்க சிவபிரான் புன் சிரிப்புக்கொண்டு "போகத்தை நீக்கினம், வீரியப்பொறி நெற்றிக் கண்களினின்றும் நீங்கின, அப்பொறிகளை பார்வதியினிடத்தே வைத்திலம். இனி அவைகளைத் தாங்கக் கூடிய ஏற்ற இடமொன்று சொல்லுங்களென்று" திருவாய் மலர்ந்தருள திருமேனிகளாயமைந்திருக்கின்ற எட்டுப்பொருள்களிலொன்ருகிய பூமியில் வைத்து எங்களைக் காத்தருள வேண்டுமென சிவபிரான் மகிழ்ந்து பூமியிலே அக்கினிப் பொறிகளை வைக்கவே, பூமிதேவி அவ்வெப்பத்தைத் தாங்கமாட்டாமல் வருந்துவதை தேவர்கள் கண்டு அக்கினி தேவனைச் சுமக்கச்சொல்லவே அக்கினி தேவனும் தாங்கி வெப்பம் பொறுக்கமாட்டாமல் கோவெனவலறி கெங்கா நதியிலே கொண்டுபோய்ச் சேர்க்கவே கங்காநதியும் பொறுக்கமாட்டாமல் இமயமலைச் சார்பிலுள்ள செந்தாமரை மலர்களலர்ந்திருக்குஞ் சரவணப் பொய்கையிலே கொண்டுபோய் விட்டாள். அங்கே விட்ட அப்பொறிகளாறும் தனித்தனியே ஒவ்வொரு செந்தாமரை மலரிலே தங்கி திவ்ய தெஜோ மயமாக உலகமெங்கும் பிரகாசித்துக் குழந்தைவடிவாக இருந்ததை தேவர்கள் கண்டு கார்த்திகை முதலிய ஆறு நக்ஷத்திரமாகிய தாய்மார்களை அக்குழந்தைகளுக்கு பால் கொடுக்கும்படி சொல்லவே, உமாதேவியார் சிவபிரானுடனெழுந்தருளி வந்து அவ்வாறு குழந்தைகளையும் ஒன்றுசேர்த்துக் கந்தனென்றும் பெயரிட்டு பால்கொடுத்து வளர்த்து வந்தார். கோடிசூரியனைப்போல விளங்கும் கநதசுவாமி சகலகலைகளு மோதாதுணர்ந்து சூர

பன்மன் முதலிய அசுரரை யெல்லாம் வேலாயுதத்தினால் கொன்று தேவர்களுக்கெல்லாம் திருவருள் புரிந்து தேவேந்திரன்புத்திரியாகிய தெய்வயானையம்மையை விவாகஞ்செய்து களிகூர்ந்து தேவர்களை யழைத்து இப்பரதகண்டத்தில் மலைவளங் கடல்வளம் நதிவளம் முதலிய சிறப்புகள் பொருந்திய க்ஷேத்திரமொன்று தெரிந்து சொல்லுங்களென, தேவர்கள் ஜெயந்திபுரமென்னும் திருச்செந்தூரே அத்தன்மைகளெல்லா முளது. அதில் ஸ்வாமி அன்புடனிருந்து வாஸஞ்செய்கின்றனெனப் பின்னும் அந்நகரத்தின் வளங்களை குமாரக்கடவுளுக்குச் சொல்லத்தொடங்கினார்.



கந்தமாதன மென்றும் சந்தனாசல மென்றும் சொல்லப்பட்ட மலையானது வல்லிக்கொடி செங்காந்தட்பூ, குராமலர், கடப்பமலர், கொன்றை மலர், வில்வம், கஸ்தூரி, மாதுளங்கம் முதலியவைகளோடும் பல மூலிக்குவியல்கள் தங்கியதும் தூங்கலோசையுஞ்செப்பலோசையுந் துள்ளலோசையும், இலையும் தளிரும் பூவும், பிஞ்சும், காயும், கனியும் தேமா கூவிள முதலியவையோடு கூடியதாக்கவிர அதன் பக்கமேயுள்ள கடலோ தூரபன்மனை ஒரு மாமரவடிவமாகக் காட்டியது. அதன் வடபாரிசம் வருகின்ற தாம்பிரவர்ணிநதியோ திருக்கயிலாய மலையிலிருந்து சிவபிரான் கட்டளைப்படி அகஸ்திய மகாமுனிவர் கமண்டலத்திலே கொண்டுவந்து பொதியமலையிலே வரவிடுத்த மகாபுண்ணியநதியாம். தேவர் முனிவர் சித்தர் முதலிய சகலரும் அந்நதியில் வந்து தீர்த்தமாடுவோர்களானால் அதன்பெருமையையும் வளர்ந்ததையும் எவ்வாறு எடுத்துரைப்பது? இவ்வாறு

...வளமும்பொருந்திய ஜெயந்திமா நகரமென்னும் ...க்ஷேத்ரமானது, தானம் தவமுதலியவற்றிற் கேற்றதாயும் கல்விப்பொருளிலுஞ் செல்வப்பொருளிலு முயர்ந்ததாயும் பிரும, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் முதலிய நான்கு வருணத்தாராலும் குலமதாசாரங்களில் சற்றேனும் முறை தவறாதிருக்கப் பெற்றதாயுமிருக்கிறபடியால், நீரெழுந்தருளித் திருக்கண் சாத்தினால் தமக்குத்தாமே தெரியவருமென சுப்ரமணியக்கடவுளுக்கு தேவர்கள் சொல்லவே ஆறுமுகக்கடவுள் உடனே தமது சேனைத் தலைவரான விரவாகுதேவரை நோக்கி நமது வீரர்களேயும், பூதசேனைகளேயும், சேனைத்தலைவர்களேயும் அதிசீக்கிரத்தில் தயாராகும்படி ஆக்ஞாபித்து, தமது சாரதியாகிய வாயுபகவானை நோக்கி ரதத்தை அலங்கரித்து வரச்சொல்லி தெய்வயானை யம்மை வள்ளியம்மை ஸகிதமாய் மனமகிழ்ச்சியுடன் வரும்பொழுது மன்மதன் வெற்றிலைப்பையைத்தாங்கவும், வருணன்படிக்கத்தைத் தாங்கவும், யமன் வாளாயுதத்தை கையிற் பிடிக்கவும் இந்திரன் சாமரை எடுக்கவும், சந்திர சூரியாள் குடை பிடிக்கவும், தும்புருநாரதர்கள் வீணைவாசிக்கவும், அக்கினி தேவன் திவட்டி பிடிக்கவும், நிருதியும் குபேரனும் ஆலவட்டம் வீசவும், தேவர்களெல்லாம் புஷ்பமாரி பொழியவும் பிரமதேவன் அன்னவாகனத்தின் மேலும் திருமால் கருடவாகனத்தின் மேலுமேறிவர முனிவர்கள் ஆசிகூற நான்கு வேதங்கள்முழங்க தருமந்தலையெடுக்க பேரிகைதுந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்க குமாரக்கடவுள் வந்தான் ஷண்முகமூர்த்திவந்தான் விமலன் வந்தான் என ஜெனங்கள் பலவாறு மனமகிழ்ந்து சந்தோஷிக்க ஆறுமுகக்கடவுள் ஜெயந்திமா நகரத்தையடைந்துகோவிலுக்குள் தெய்வயானை வள்ளியம்மை

யுடனே புகுந்த மைந்தர் எழுந்தருளி யிருந்தபின் பிரமா விஷ்ணு தேவர்கள் முனிவர்கள் முதலியவர்களுக்கும் தங்கள் தங்களிருப்பிடம் போகும்படி விடைகொடுத்தனுப்பி நான்கு வேதங்களிலும் வல்லவர்களாகிய திரிசுதந்தரர்களாற் பூசிக்க குமாரக்கடவுள் உலகத்தைக் காத்தருளியிருந்தார்.



மகாமேரு பருவதத்தில் மேகமென்னும் ஓர் முனிவர் விஷ்ணு மூர்த்தியை நோக்கி யாவரும் அதிசயிக்கக் கூடிய தவஞ்செய்து கொண்டிருந்தனர். இதைத் தேவேந்திரன் அறிந்து இரண்டு தேவர்களையும்தெய்வப் பெண்களையுமழைத்து காமத்திறமும் காந்தருவத்தினாலும் அம்முனிவருடைய தவயோக நிலையைக்குலைத்து மனதை மயக்கி வரும்படி கட்டளையிட அவர்கள் அவ்விதமே காத்திரமான காரியங்கள் புரிய, முனிவர் யோகத்தைவிட்டு காமமேலிட்டவராய் அப்பெண்களைப்பார்த்து "நீங்கள் யாவர்,என் தவநிலையைக் கெடுத்துவிட்டதினால் நீங்கள் பூமியிலே வேடர்களாகவும் வேடப்பெண்களாகவும் பிறந்து உழலக்கடவீர்களென்று" உக்ரசாபங் கொடுக்கவே தேவர்களும் அத்தெய்வப் பெண்களும் தங்கள் கரங்களைக் கூப்பிக்கொண்டு; சுவாமீ! தெரியாமற்செய்துவிட்டோம், மன்னிக்கவேண்டும் தயவுசெய்து இக்கொடிய சாபம் நீங்கி எங்கள் பழைய வடிவம் வருங்காலத்தைச் சொல்லவேண்டுமென அம்முனிவர் சொல்லுற்றார்:—

குமாரகடவுள் ஜெகத்தை ரக்ஷிக்க எண்ணி அசுரர்களை வேரறுத்த விஷ்ணுமூர்த்தியினுடைய நேத்திரங்களிலே பிறந்த அமுதவல்லி (தெய்வயானை)

சுந்தரி (வள்ளி) என்னுமிரண்டு மாதர்களை விவாகஞ் செய்து திருச்செந்தூரிலே வந்து, பிரமன், திருமால், இந்திரன், தேவர்கள் முனிவர்கள் முதலியவர்களெல்லாம் வந்து நிற்கச்சிறப்புடனெழுந்தருளி யிருக்கையில், அமுதவல்லியென்னும் தெய்வயானையம்மை நாம் பேரழகிற் சிறந்தும் முந்திய மனைவியாயு மிருக்கிறோமென அகங்காரங்கொண்டிருக்கிறதைத் தெரிந்த சுந்தரியென்னும் வள்ளியம்மை அவளை நிந்தனைசெய்து தன்னுபகாரகிய வேலாயுதக் கடவுளுக்கு நெடுங்காலம் அளவற்ற காமத்தையுண்டு பண்ணி தன்னைவிட்டுச் சற்றும் அகலாதிருக்கும்படி சுகானுபவத்தோடிருந்தனள். இவ்விஷயங்களை யெல்லாம் நன்குணர்ந்த குமாரக்கடவுள் வள்ளியம்மையை நோக்கி நீ தெய்வயானையை நிந்தித்ததையும் அவள் பொறுத்துக்கொண்டதையும் நாம் தெரிவோம். உலகத்தில் பொறுமையுடைய மாதர்களே தலைமையானவர்களாதலின் அவர்களைத் தேவர்களும் தொழத்தக்கவர்கள். பெண்ணே நீ தெய்வயானையை நிந்தித்து விரோதித்த காரணமாக உனக்கொரு சாபம் கொடுக்கின்றனம்.

அதென்னவெனில்:— உன்னுடன் நாம் எவ்வளவு காலம் இன்ப சுகாதிகளை யனுபவித்திருந்தோமோ அவ்வளவு காலம் அவளிடத்திலும் இன்பசுகத்தையனுபவிக்கவேண்டும். அதுவரை நீ இவ்வுலகத்தில் மான் வயிற்றிற் பிறந்து வேடர் குலத்தில் வளர்ந்திருக்கக்கடவாய். இச்சாபம் நீங்கும் காலமறிந்து நாம் தேவர்கள் சகிதம் வந்து அக்கினி சாக்ஷியாக உன்னை விவாகஞ் செய்துகொள்வோமென்றார். இது நிற்க, காஞ்சியை

பொன்னும் தெய்வப்பெண் உமாதேவியாருக்குத் தோழி யாயிருக்க விரும்பி விந்தியமலைச்சாரலிலே வெண்மான் ரூபமாகி யுலாவித்திரிகையில் அம்மான்வயிற்றிலே குமாரக்கடவுள் சாபமேற்ற மனைவியாகிய சுந்தரி பிள்ளையாகப்பிறந்து அப்பிள்ளையை நீங்களெல்லாரும் எடுத்து வளர்த்து பருவமுற்றுத் தினைப்புனம் காக்கும் சமயம் பார்த்து ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் அங்கு வந்து இந்திரியாகியவள்ளியம்மையை விவாகஞ்செய்வார். அக்காலம் உங்களுக்கு இச்சாபம் நீங்கிப் பழையபடி வடிவம் பெற்று மகிழ்ச்சியடைவீர்கள் எனச் சொல்லியருளினார். அம் முனிவர் முன்போலத் தியானத்திலிருந்தனர். அடவி சுற்றித்திரியும் வேடர்களும் தங்கள் வடிவமாறி விந்தியமலைப் பக்கத்திலிருந்து கொண்டிருந்தனர். மேற்சொல்லியபடி போலவே காஞ்சனையென்னும் தெய்வப்பெண் வெண்மானாக அவ்விடம் வந்து சுந்தரிக்கையில் முருகக்கடவுளாற் சாபமேற்ற மனைவியாகிய சுந்தரியை கருப்பத்திலே தாங்கிய அம்மானானது ஞானப்பிரகாசம் தங்கிய கற்பு நிறைந்த மணிபோன்ற ஓர் பெண்குழந்தையைப் பெற்றவுடன் அம்மான் உருவம் நீங்கி தெய்வவடிவுற்றவளாகி பார்வதியினிடம் தோழியாகவிருந்தனள். மேற்சொல்லிய பெண்குழந்தையை அங்கிருந்த வேடர்கள் எடுத்துக்கொண்டு போய் அவ்விந்திய மலைக்குத் தலைவனாகிய வேடராஜனிடம் கொடுக்க அவ்வரசன் மிக்க மனக்களிப்புடன் அக்குழந்தைக்கு வள்ளியென்னும் பெயரிட்டு தன் மனைவி கையில் கொடுக்கவே அவளும் நன்றுள்ளன்புடனே வாங்கி வளர்த்து வரவே அக்குழந்தைக்குப் பேதைப் பருவம்

நீங்கி மங்கைப் பருவம் வந்தவுடன் தோழிப்பெண்கள் அவ்வள்ளியைத் தினைப்புனங் காவலுக்கு அழைக்கவே வள்ளியம்மையும் அவர்களுடன் சென்று மலை வனங்களெல்லாஞ் சுற்றி தினைப்புனத்தைக் காத்துக் கொண்டிருக்கையில் மயில்வாகனத்தின் மீதேறி ஆகாய மார்க்கமாய் வந்து வள்ளியம்மையின் பக்கத்தில் ஆறு திருமுகமும் பன்னிரெண்டு கரங்களுட பன்னிரு கண்ணும் சிவந்த மேனியுடனும் நின்ற முருகக்கடவுளை வள்ளிநாயகி கடைக் கண்ணால் பார்க்கவே ஸ்ரீவேலும் மயிலோனுக்கு அளவில்லாக் காமமீறி தன் மனதை வள்ளியிடம் பறிகொடுத்தவராய் வள்ளியம்மையைப்பார்த்து "என்ன காம்பீர்யம், என்ன ரூபம், என்ன காந்தி, என்ன யௌவனம், என்னதேஜஸ், என்ன தாவள்யம் என்ன ஸௌந்தர்யம், என்ன பால்யம், என்ன மனோக்ஞமானகுணம், என்ன சாந்தம், என்ன ஸந்தோஷம், என்ன உல்லாஸம், என்ன கோலாகலம், என்ன மந்தகாஸம், ஜகந் ஜோதியோ, ராஜஹம்ஸினியோ, பூலோக ரம்பையோ, மாசிலா மங்கையோ, கன்யா சிரோமணியோ, துர்க்கையோ, லக்ஷிமியோ, ஸரஸ்வதியோ, ஸ்திரீ மூர்த்தியோ, திரிலோக மோகினியோ, ஸ்ருஷ்டியின் மாயையோ, கோகிலமோ, நவகுமுதினியோ, கலாநிதியோ மனோரஞ்சிதமோ என" பலவாறு புகழ்ந்து முன்னே வந்து பெண்ணே! நீ யார்? நீ யிருக்குமிடம் யாது? உன் தாய் தந்தை யாவர்? இக்குறப் பெண்களோடு வந்திருக்கிற காரணம்யாது? உன்னையன்புடன் இச்சிக்கும் நாயகன் யாவர்? விவரமாய்ச் சொல்வாய் என்று சொல்லியவார்த்தையைக் கேட்ட வள்ளி

யம்மை குமாரக்கடவுள் மீது கடைக்கண்களை நோக்கி புன்சிரிப்புக்கொண்டு சுவாமி! என்னைப்பெற்றபிதா இம்மலைக்குத் தலைவன், பெயர் வேடராஜன், இருப்பிடம் [illegible], நானும் கன்னிகைதான் என்றாள். இம்மதுரமான மொழியைக் கேட்ட ஷண்முகக்கடவுள் பெண்ணே! என்னை நீ விவாகஞ்செய்துகொள்ளச் சம்மதந்தானா? என்றமொழியைக் கேட்டுவள்ளியம்மை சுவாமி! நாமிருவரும் எவ்விதம் செய்துகொள்வது, தாய்தந்தையர்கள் சம்மதமின்றியில் செய்துகொள்வது லோகத்தில்வழக்கமாயிருப்பதால் என்னுடைய தாய் தந்தையர்களிடம் நீங்கள் சென்று அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் தங்களுடைய சுந்தரரூபத்தைப்பார்த்தவுடனே அக்கினி சாக்ஷியாக என்னை விவாகஞ்செய்து கொடுப்பார்கள். இதுதான் யுக்தம் என்ற வள்ளியம்மையின் மிருது மாதுரியமான இனிய வார்த்தைக்கிரங்கி, இரண்டு பாதங்களையும், ஆறு திருமுகங்களையும் பன்னிரண்டு புயங்களையும், மறைத்துக்கொண்டு வேலாயுதக்கடவுள் மானிட உருவத்துடன் வேடராஜனிடம் சென்று குறவர்களுக்கரசனே! உனது புத்திரியின் பேரிலாசைப்பட்டு வந்தோமாகையால் தாம் எனக்கு அவளை விவாகஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று சொல்லிய மொழியைக்கேட்ட வேடராஜன் எனது மலைக்குத்தெய்வமாகுங்குமாரக்கடவுளுக்கே எனதுபுத்திரியை விவாகஞ்செய்து கொடுப்பேனேயல்லாது திருமூர்த்திகள் வந்துயாசித்துக்கெஞ்சிக்கேட்டாலுங்கூடக் கொடுக்கமாட்டேனாகையால் உனக்கெப்படிகொடுப்பது போவெனச்சினந்து சொல்லியமொழிகளை முருகக்கடவுள் செவிகளுக்கமுதமாகக் கொண்டு மகிழ்ச்சியுடன்

மலைப்பக்கத்தின் தினைப்புனத்திற்குச் சென்று வள்ளி
நாயகியின் முன் ஓர் பெரிய வேங்கை மரமாகி நின்ற
அத்யாச்சரியக் காட்சியை வள்ளியம்மையும் அவளு
டைய சேடிமார்களும் பார்த்தானந்திக்க அவ்வினி
மையான மரத்தினடியிற் வீசிய தென்றற் காற்றினு
லாவி மனோரம்மியமாகச் சயனித்து நித்திரை செய்
யுஞ் சமயத்தில் பரிவாரத்துடன் தனது புத்திரியை
பார்க்கவந்த வேடராஜன், பூமலருந் தேனும் சொரிந்து
நிற்கும் இவ்வேங்கை மரத்தைப் பார்த்து அத்தியாச்
சரியமடைந்து மாயச்சூதென நினைந்து அம்மரத்தை
முறித்துத் தறித்துவிடும்படி ஆஞ்ஞாபிக்க ஷண்முக
க்கடவுள் மரவுருவம் விட்டு நீங்கி ஒளித்துக்கொள்
ளவே வேடராஜன் தமது புத்திரியை அழைத்துக்
கொண்டு தன்னூர் வந்து சேர்ந்தனர்.

சிற்சிலநாட்சென்று ஒருநாள் வள்ளிநாயகிதன்
தோழிமார்களுடன் தினைப்புனத்துள்ளே இருக்க, மர
வுருவை மறைத்துச் சென்ற குமாரக்கடவுள் வள்ளி
யம்மையை நினைந்து, திகை தியங்கி மதிமயங்கி நிற்க
மன்மதன் பாணங்களால் வாதிக்க, வள்ளிமோகந்தா
க்க, காமசோகஞ்சோதிக்க, சஞ்சலஞ்சேதிக்க ஓர்கவலை
யடைந்தவராகி யானை முகத்தினையுடைய விநாயகக்
கடவுளிடம் வந்து தமதிருகரங்களையும் கூப்பிக்கொண்டு
தமதுள்ளக் கருத்தை விவரித்துரைக்கவே விநாயகக்
கடவுள் ஓர் மதயானைவடிவமெடுத்துக்கொண்டு வள்ளி
க்கு முன்னின்று வரவே அவள் கண்டு மிக்கப்பயந்து
பக்கத்திலிருந்த முருகக் கடவுளைக் கட்டித் தழுவிக்
கொள்ளவும் குமாரக்கடவுள் மிக்கக் களித்து கண்மணி
யே! என்னைத்தழுவின மாத்திரத்திலேயே அங்கம்பரவ
சமாய் மனங்குளிர்ந்தேன் என்று ஒருவரோடொருவர்

ஆனந்தித்துக் கொண்டிருக்க அந்த நடந்த வர்த்தமானத்தைத் தோழிப்பெண்கள் கண்டு வேடராஜனிடம் தெரிவிக்க வேடராஜன் கேட்டு மகா சந்தோஷத்துடனே அங்கு சென்று அவர்கள் நின்ற நிலைமையைப் பார்த்தவேளைய புத்திரியைக் கலந்தவன் நம்மலைக்குத் தெய்வமாகும் குமாரக்கடவுளே யென்று தீர்மானித்து அளவற்ற சந்தோஷமடைந்து ஆனந்த கண்ணீர் சொரிய சுவாமியின் பாதங்களைப் பற்றிக்கொண்டு தொழுதுநின்று பல்வகையாய்த் தோத்திரஞ்செய்யத் தொடங்கினான்.

[illegible] போற்றி
[illegible] போற்றி
[illegible] போற்றி
[illegible] போற்றி போற்றி.

[illegible] போற்றி
[illegible] போற்றி
[illegible] போற்றி
[illegible] போற்றி.

இவ்விதம் புகழ்ந்து இம்மலைச்சாரலிலே தேவர் முனிவர் சகிதம் எழுந்தருளி வந்து தன் புத்திரியை வேதாகம விதிப்படி விவாகஞ்செய்துகொள்ள வேண்டுமென்று வேடராஜன் பிரார்த்தித்து குமாரக் கடவுளை நோக்கி எங்களுடைய ஜாதி பழக்கப்படி இவளை மணந்துகொள்ளுங்களென்று தன் மகள் கையைப்பிடித்து சொர்ணமுஞ் ஜலமுந்தாரை வார்த்து குமாரக்கடவுளுடைய திருக்கரத்திலே கொடுக்கவே தேவர்களெல்லாரும் புஷ்பமாரிபொழிந்தார்கள். மங்கலவாத்தியகோஷங்கள் முழங்கின. இத்தகைய சமயத்தில் திரிசுதந்திரராகிய பிராமணர்கள் யஜுர்வேதாகம விதிப்படி அக்கினி சாக்ஷியாக விவாகஞ்செய்வித்து ஹோம குண்டத்திலே

பொரி யிறைத்து அம்மி மிதித்து சாஸ்திரப்பிரமாண மாக விவாகத்தை முடித்தனர். கலியாணக்கோலந் தரி சித்து வந்திருந்த திருமால்-பிரமன்-இந்திரன்-தேவர் முனிவர் முதலானோர்கள் திருவருள் பெற்று அவரவர் களிருப்பிடஞ்சென்றார்கள். சாபத்தால் வந்த வேடர் களும் சாபம்நீங்கிக் குமாரக்கடவுள் திருவடியையடைந் தார்கள்.

இந்த கல்யாண மகோத்ஸவம் குதூகல மாயிருக்கையில், விவாஹத்தை உத்தேசித்து முருகக் கடவுள் சென்றது முதல் தெய்வயானையம்மை கந்தமா தனத்தில் சிவபிரானை நோக்கித் தவஞ்செய்ய அவர் பிரத்தியக்ஷமாகவே, அவரைத் தரிசித்துத் தமது நாய கன் கருதிச்சென்ற விவாஹத்தை முடித்தருளி, யானும் அவர் மணந்தவரும் மனைவியும் மிக்க ஒற்றுமையாகிய மனத்தினராயிருந்து வாழ்கவேண்டுமென்றும், உலகத் திலுள்ளார் யாவர்களுக்கும் திருவருள் சுரந்து காத்தி ரக்ஷிக்க வேண்டுமென்றும் இருகரங்களையுங் கூப்பித் துதித்து நிற்கவே, சிவபிரான் மிக்க மகிழ்ச்சி கூர்ந்து அப்படியே யாகுகவெனக்கேட்ட வரங்களை யெல்லாம் கொடுத்து மறைந்தனர். இச்சமயத்தில் மான்மகளு டன் குமாரக்கடவுளி ரதத்தின்பேரில் கந்தமாதனத்தின் பக்கமே வெகு உல்லாஸமாக வருவதைத் தெய்வயானை யம்மை பார்த்து அத்யந்த சந்தோஷத்தின் தன்மையா ல் அன்புடனெதிர் சென்று தமதிருகரங்களையுந் தலைக் கு மேலே குவித்துக்கொண்டும் தமதிருகண்களினின் றும் தாரை தாரையாய் ஆனந்தக் கண்ணீர் அருவி போற் சொரிய நின்றதைக்கண்டமாத்திரத்தில் தேவை.

நியுக்தி அவ்விருவரும் கைகளை நீட்டி தெய்வயானையம்மையை யெடுத்துத் தேரிலேற்றிவே வேலாயுதமூர்த்தி தமதிடதுபாகத்தில் வைத்துக்கொண்டு இரண்டு பக்கமும் இரண்டு மனைவிகளுடன் வீற்றிருந்த ஷண்முகமூர்த்தியின் திருக்கோல காக்ஷியை இவ்வாறென எடுத்துரைக்க ஆயிரம் நாவுள்ள ஆதிசேஷனாலும் முடியாதெனில் எளியேனாகிய எம்மாலே சொல்லத் தரமோ? இவ்வாறு ஷண்முகமூர்த்தி ஆலயத்தின் கண் வந்து இரண்டு மனைவிமார்களுடனும் தேரைவிட்டுக்கீழிறங்கி ஆலயத்தினுள் சென்று சிறப்பாக வீற்றிருந்தருளி திரிசுதந்தரர்களை நோக்கி மறையவர்களே! கவனித்து கேளுங்களெனப் பின்வருமாறு எடுத்துரைக்க லாயினார்:—

1. இந்த சிந்துபுரமானது புண்ணியத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கும் க்ஷேத்ரமாகையால் நம் மனைவியரிருவர், இவ்வாலயத்தின் கண்ணுள்ள பொருள்கள் முதலிய எல்லாவற்றையும் காவல் செய்துகொள்வது உங்கள் கடைமை.

2. இங்கு வசிக்கும் திரிசுதந்தரராகிய நீங்கள் இரண்டாயிரம்பேர்களில் நாமுமொருவராவோம்.

3. நீங்கள் நம்மைத் தரிசித்துத் துதிப்பதினாலடையும்பலனை உங்களை வந்து சார்பவர்களுமடைவார்கள்.

4. இவ்விரண்டு மனைவிமாருடனே நாம் வசிக்கின்ற சிந்துபுரத்திற்கு வருபவர் ஞானமில்லாதவரானாலும், நம்மை நேரில் தரிசித்துத் துதியாதவரானாலும்,

பழியாதகங்களைச் செய்தவராணுலும் அவர்களுக்கு நிச்சயம் மோக்ஷத்தைக் கொடுத்தருளுவோம்.

மேற்சொல்லிய வார்த்தையைக் கேட்ட பிராமணுள் சுவாமீ! தங்களையே நம்பியிருக்கும் எங்களுக்குத் தரித்திரம் பிணி முதலியவை நீங்கி, கல்வி, ஞானம், மோக்ஷம் முதலிய பெறுவதற்கேதுவான அமுதமயமான இனிய சுவையுற்ற ஓர் தீர்த்த முண்டுபண்ணித் தாவேண்டுமெனப் பிரார்த்தித்த தக்ஷணமே குமாரக் கடவுள் அத்யந்த மனமகிழ்ச்சி யடைந்து தமதுகோயிலின் தென்திசையை நோக்கித் தமது திருக்கரத்திலேந்திய ஞான சத்தியாகிய வேலாயுதத்தை யெடுத்து இருநூறுவிற்கிடை தூரத்திலே விடுக்கவே அவ்வேலாயுதம் ஆங்குசென்று ஆதிசேஷன் முடிவரையும் பூமியைப்பிளந்து போய் கங்காநதியை அவ்வழியாகப்பெருக்கெடுத்து மேலெழுந்து வரும்படி செய்துவிட்டுத்திரும்ப ஷண்முகமூர்த்தியின் திருக்கரத்திலே முன்போலே வந்திருந்து களிப்படைந்தது. இவ்வாறு வெளிப்பட்ட தீர்த்தத்திலே கந்தக்கடவுள் வேதாகமவிதிப்படிமுதலில் மூழ்கி எழுந்தகால் கந்தபுஷ்கரணி யென்றும்பெயர் பெற்றது.

இங்கு வந்தாரம்பதீர்த்த விசேஷத்தின் உண்மையைப் பற்றி கொஞ்சம் கவனிப்போம்:—

1. முன்னொரு பிர்மகற்பத்திலே திருமால் ஆதிசேஷனிடத்தில் நித்திரை செய்துகொண்டிருந்ததை விட்டு மூன்று தடவைகள் இராமாவதாரமெடுத்து இலங்கைப்பட்டணத்தையும் அதற்கரசனுகிய இராவணனையும் கெடுப்பதற்கு நினைத்து நமது சன்னதிக்கு

முன்னே ஆதி சேதுவென்னும் அணைகட்டிச்சென்ற மான்மியமுள்ளதாகையால்புனிதம்பெற்ற வநுராம்பதீர்த்தமாகிய சமுத்திரத்திலே பிரதிதினமும் ஸ்நானஞ் செய்யலாம்.

2. கந்தமாதன மலையானது மகாமேரு மலையுடன் யுத்தஞ்செய்து தோற்றதன்னிமித்தம் மிக்க மனம் வருந்தி, பொன்மலையாகவேண்டுமெனநினைத்து நம்மை நோக்கி அரியதவஞ்செய்யவே, ஜெயந்திபுரத்தையடைந்து சிறுமலையாயிருந்து நம்மைத் துதித்துக்கொண்டிருந்தால் தற்காலம் நடக்கின்ற பிரமகற்பம் நீங்கிப் பின் வரும் பிரமகற்பத்திலெல்லையிலே பொன்மேருவாய் விளங்குவாயெனச் சொல்லியதாலே கந்தமாதனமானது மைநாக சந்நிதியிலுள்ள வநுராம்பதீர்த்தத்திலே மூழ்கி நம்மை வணங்கித் தியானித்துக்கொண்டிருந்தது.

3. பிராமணர்களே! இன்னமுஞ் சொல்லுகிறேன் கேளுங்கள்:—

பிரமதேவன் ஓர் சமயத்தில் பரமேசுரனை யிகழ்ச்சி செய்ததைச் சிவபிரானறிந்து வயிரவமூர்த்தியை யழைத்து, பிரமதேவனுடைய ஐந்து தலைகளிலொரு தலையைப் பிரத்தஞ் சேத நகத்தினாலே கிள்ளியெறியும்படி யாக்ஞாபிக்க, கபாலமேந்திய வயிரவர் பிரமதேவனிடஞ் சென்று அவனுடைய தலையொன்றை கிள்ளிப்பிடுங்கித்தெறியவே பிரமதேவன் மிக்க மனவருத்தமுற்று வைகுண்டஞ்சென்று தனது பிதாவாகிய திருமாலினது பாதங்களை வணங்கிச் சோர்ந்து நின்ற புதல்வனைத்தேற்றி, சமுத்திரத்திலே மாமரவடிவமாகிய சூரபன்மனைக்கொன்ற வேலாயுதக்கடவுளது ஆறெழுத்து

பத்திரத்தைப்பரிசோதிக்கிறேன். அதைமெய்யன்புடன் சாதிவெற்றி வரவேண்டுமெனச் சொல்லியவாறே தியானித்து இரவும் பகலும் இடைவிடாது தவஞ்செய்வதை யாம் கண்டு, சதுர்முகப்பிரமனே! நீ செய்யும் மாதவம் யாதுபற்றியெனக்கேட்கவே, அவன்சுவாமி! என் தலைகளைந்திலொன்றை இழந்தேன். அக்குறை நீக்கியருளவேண்டுமெனச் சொல்லி கீழே விழுந்து கண்ணீர்சொரியப் பலவாறு போற்றிய ஸ்தோத்திரத்தைக் கேட்டு யாம் மனமகிழ்ந்து பிரமனை நோக்கி நீ யிச்சித்தவாறே யாம் தருவோம் எனவே பிரமனும் முகம்பெறுவதற்கு ஆரம்பத்திலே அவ்விதமே மூழ்கியதினால் அக்கடலிதுக்கு வராநநதீர்த்தமெனச் சொல்வதாம் முறையாகும். பிராமணர்களே! இன்னுமொரு சந்தர்ப்பந் சொல்லுகிறேன் தெரிந்துகொள்ளுங்கள்:—

கலிங்கதேசத்தரசன் புத்திரியாகியகனகசுந்தரி யென்பவள் பொதிகமலைச்சாரலிலே தாம்பிரபருணிநதி முகத்துவாரத்திலே ஸ்நானஞ்செய்ய வந்தவிடத்தில் ஆங்கு தபசு செய்துகொண்டிருந்த அயச்கிரீவ முனிவரைக்கண்டு அவமதித்துச் சிரித்துப் பரிகாசஞ் செய்யவே அம்முனிவர் கோபங்கொண்டு நீ வருஞ் ஜனனத்திலே குதிரைமுகமாகப்பிறக்கக் கடவாயென்று சபிக்கவே கனகசுந்தரி முனிவரை ஸ்தோத்திரஞ் செய்து, சுவாமீ! இக்கொடிய சாபந்தீருங்காலத்தைத் தெரியச் சொல்லவேண்டுமெனப்பிரார்த்திக்க, முனிவர், பெண்ணே!பிரமதேவன் தமது ஐந்து தலைகளிலொருதலையை இழந்ததற்காக கந்தமாதன வரையின் கண்ணேயுள்ள திருச்செந்தூரில் சுப்பிரமணியக்கடவுள்சந்நிதிக்குமுன்

ளிருக்கும் சமுத்திரத்திலே மூழ்கித்தவஞ்செய்தான். நீயும் அச்சமுத்திரத்திலேமூழ்கினுற்குதிரைமுகம்மாறி மனிதமுகம் பெறுவாய் யென்றார். அவ்விதமே மறு ஜென்மத்தில் சுந்தரி மதுரா நகரத்தில் உக்கிரப்பெருவழுதியெனு மாசனுக்குக் குதிரை முகத்துடன் புத்திரியாகப்பிறந்தபொழுது அரசன் வருந்துஞ் சமயத்தில் வாவி-கூபம்-நதி-கடல் முதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தால் நல்லமுகமாய்விடுமென ஓர் அசரீரி சொல்லக்கேட்டு உடனே அரசன் தமது பரிவார சேனைகளுடனே அங்கசுந்தரியென்னுஞ் சுந்தரியைத்தீர்த்த யாத்திரைக்கனுப்பினுன். அவ்விதமே சுந்தரி கங்காநதிமுதலிய அநேக தீர்த்தங்களாடிக் கடைசியாக வதனுரம்பதீர்த்தத்தில் மூழ்கவே உடனே குதிரைமுகம் போய் பூரணசந்திரன்போன்ற முகத்தைப் பெற்று, நம்மை அருச்சித்து பூசனைசெய்தாள். ஆகையால் இவ் வதனுரம்ப தீர்த்தம் சகல பாபத்தையும் நிவிர்த்திக்கும். இனி திரிசுந்தரர்களின் வரலாற்றைக் கவனிப்போம். அவர்களை தியானிப்பவர்களின் பெருமையை வேதங்களாலுமெடுத்துச் சொல்லமுடியாவென்றால் அவர்களுடையபெருமையை எவ்வாறு எடுத்துரைப்பேன், தெரிந்தவரையில் சொல்லுகின்றேனென வியாசமுனிவர் கூறலுற்றார்:—

திரிசுந்தரர்களாகிய பிராமணர்கள் கங்காநதிக் கரையிலே தவஞ்செய்யுமுனிவர்கள். நான்கு வேதங்களையும் பிரகாசப்படுத்தும் பேரறிவுள்ளவர்கள். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றலென ஆறு கருமங்களையுமுடையவர்கள். காம-குரோத லோப-மோக-மத-மாச்சரியமென ஆறுகுற்றங்களையும் கெடுத்துப்பார்த்தவர்கள். அரிய யாகங்கள் செய்யுமுறை

யிற்றோர்ந்தவர்கள். பகையில்லாதவர்கள். வாயஸபலி செய்து அதிதியரோடு புசிப்பவர்கள். விபூதி ருத்திராக்ஷமே ஆபரணமாக அணிபவர்கள். நித்திய அனுஷ்டானங்களைக்கைவிடாதவர்கள். ஸதாகடவுளையே தியானிப்பவர்கள். ஆசாரியமனங்களையே அனுசரிப்பவர்கள். பரிசுத்தமுள்ளவர்கள். திரிகாலத்தையுமறியும் யோக்கியதையுடையவர்கள். அவர்கள்பித்ருக்களுக்குமனுநெறிமுறைவழுவாமல் * தொண்ணூற்றாறு சிராத்தங்களையும் விதிப்படிசெய்கின்றவர்கள். இவர்கள்பிரமதேவனைநோக்கித்தவஞ்செய்யவே, பிரமதேவன் பிரத்தியக்ஷமாகி முனிவர்களே! உங்கள் மாதவத்துக்கு மனமகிழ்ந்தனம். உங்கள் விருப்பம் யாதெனக்கூற, முனிவர்கள்பூவுலகமும்-சுவர்க்கவுலகமும் சத்தியவுலகமுஞ்சென்றுவசிப்ப

---

* (தொண்ணூற்றாறு சிராத்தஞ்செய்யுங் காலங்களாவன) ஐப்பசிமாதத்துச்சுக்கிலபக்ஷத்து நவமி, கார்த்திகைமாதத்துச் சுக்கில பக்ஷத்து அஷ்டமி, வைகாசிமாதத்துச் சுக்கில பக்ஷத்து திரிதிகை, மாசிமாதத்துச் சுக்கிலபக்ஷத்துச்சத்தமியாகிய யுகாதி நான்கும்; மாதந்தோறும் வரும் பௌர்ணமியும், தைமாதத்துச் சுக்கிலபக்ஷத்துச் சத்தமியும், ஏகாதசியுமாகிய மனுப் பதினான்கும்; புரட்டாசி மாதத்துக் கிருஷ்ண பக்ஷத்துப் பிரதமை முதலிய பதினைந்து பக்கமும் அதன் பின்னர் வரும் பிரதமை முதலிய மூன்றுதிதியுமாகிய மாளயம் பதினெட்டும்; மாதந்தோறும் வரும் அமாவாசி பன்னிரண்டும்; சங்கிரமகாலம் பன்னிரண்டும், (அதாவது ஒரு மாதத்தினிறுதி மற்றொருமாதத்தின் முதலைச் சந்திக்குங்காலம்); வைதிருதியோகம் பன்னிரண்டும்; வியதிபாதயோகம் பன்னிரண்டும், மார்கழி, தை, மாசி, பங்குனிமாதத்து அபரபக்ஷத்துச் சத்தமி நவமிகளாகிய அனு அட்டகையெட்டும்; இவற்றின் நடுவேவரும் அட்டமிகளாகிய மகா அட்டகை நான்குமாம்.

தற்கு இச்சைகொண்டோமாகையால் அங்காங்குவசிப்ப தற்கு யாதொரு இடையூறுமில்லாத வரமருளவேண்டுமென வேண்ட பிரமதேவன் அவ்விதமே வரங்கொடுக்கவிட்டொழிந்தனர். பின்பு முனிவர்கள் திருமாலையும் சிவபிரானையும் நோக்கித்தவஞ்செய்து அவர்களிடத்திலும் மேற்கூறிய [illegible]டத்திலும் போய் [illegible] கருத்[illegible] வரங்களைப் பெற்று அம்மூன்றுலகத்தினுஞ் சென்று சஞ்சரித்திருக்கிறார்கள். இவ்விதம் திருமூர்த்திகளிடத்திலும் மேற்கூறியபடி தத்தவரங்களைப் பெற்றமையாற்றான் அவர்கள் திரிகாலஞானிகளெனப் பெயர்பெற்றார்கள். இவர்கள் [illegible] எழுபத்திரண்டாயிரம்பெயர்களில் விருத்தாசலத்தில் ஆயிரம் பெயர்களும், [illegible] இரண்டாயிரம் பெயர்களும், [illegible] மூவாயிரம் பெயர்களும், கமலாலயத்தில் நாலாயிரம் பெயர்களும், திருவண்ணாமலையில் ஐயாயிரம் பெயர்களும், திருவி[illegible]மலையில் ஏழாயிரம் பெயர்களும், மதுரையில் எண்ணாயிரம் பெயர்களும், கண்டகாவனத்தில் ஒன்பதினாயிரம் பெயர்களும், கோகுலத்தில் பதினாயிரம் பெயர்களும், பதிரிகாச்சிரமத்தில் பதினோராயிரம் பெயர்களும், சுவாமிமலையிலே பன்னீராயிரம் பெயர்களுமாக பற்பல ஸ்தலங்களிலே சென்று அங்காங்குவசித்துவந்தனர். இவர்களை எவர்களாகிலும் நெஞ்சத்தில்நினைத்தாலும், துதித்தாலும் வணங்கினாலும், திரிமூர்த்திகளையும் தரிசித்தபலன்களை படைவார்களென்பது ஸத்தியமென வியாசமுனிவர் கூறினர்.

இனி தீர்த்தங்களின் ஸ்நானவிதியையும் ஷண்முகக்கடவுளின் பூஜாவிதியையும் நிவேதனவிதியையுஞ் சற்று கவனிப்போம்.

1. கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நக்ஷத்திரத்திலே வதனாரம்பதீர்த்தத்திலே மூழ்கி முருகக்கடவுளை வணங்குவோர் இம்மையில் அரசராகி மறுமையில் பேரின்ப செல்வத்தையடைந்து இறுதியில் ஷண்முகக் கடவுளது ஸாரூபத்தையடைவார்கள்.

2. மாதாமாதம் வருங்கார்த்திகை நக்ஷத்திரத்திலே முகாரம்பதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து ஷடாக்ஷரக்கடவுளைத்தரிசித்து அவர் பாதத்தில் அருச்சித்த மலரைமுடியில் சூடினோர்களுடைய கதியானது சொல்லத்திறமன்று

3. மாசி மாதத்தில் மூன்று நாளேனுமிரண்டு நாளேனும் மொருநாளேனும் வதனாரம்ப தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து வேலாயுத மூர்த்தியின் பாதமலரைத் தரிசித்தவர்கள் ஜனன வேதனையினின்றும் நீங்குவார்கள்.

4. சித்திரைமாதம் முப்பது நாளும் ஷை தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து வேலுமயிலோனை தரிசித்தவர்கள் மோக்ஷத்தையடைவார்கள்.

5. மாசிமாதத்திலே கந்தபுஷ்கரணியிலே மூழ்கி கந்தக்கடவுளை ஸ்தோத்திரஞ் செய்து சேவிப்பவர்களைப் பார்த்தவர்களது துன்பமெல்லாம் நீங்குமென்றால் அவர்கள் பெறும்பலன் யெவ்வாறெனச் சொல்லவும் வேண்டுமோ?

6. சித்திரை. ஐப்பசி மாதங்களிலும் உத்தராயன தக்ஷணாயன புண்ணிய காலங்களிலும் சரவணபவனை தரிசிப்பவர்கள் வாஜபேயயாகஞ் செய்த பலனையடைவார்கள்.

7. சங்கிரம காலங்களில் கந்தபுஷ்கரணியில்

நாற்கு விழாபத்தின் பருப்பும் அரிசியும் கலந்த அன்னத்தை முருகவேளுக்கு நிவேதனஞ்செய்தவர் நாயயாகஞ்செய்த மேலானபலனைப் பெறுவார்களென வேதங்கள் முறையிடுகின்றன.

8. ஆடிமாத முப்பதுநாளும் பசுவின் தயிர் கலந்த அன்னத்தை குமாரக்கடவுளுக்கு நிவேதிப்பவர் அவருடைய திருவடியை யடைவார்கள்.

9. ஆவணிமாத முழுவதும் ஆறுமுக நயினாரைப் போற்றுகிறவர்கள் நாயபாகஞ்செய்தவர்பெறும் பதவியை யுறுதியாகவடைவார்கள்.

10 புரட்டாசிமாதம் மாளய பக்ஷமுழுவதும் ஜெபத்திரத்திலே விரதஞ் செய்பவர்களுடைய பிதிருக்களெல்லாம் சத்தியலோகத்தையடைவார்கள்.

11. மார்கழி மாதத்தில் குமாரக்கடவுளுக்குத் தயிரோதனத்தை நிவேதிப்பவர்கள் வைகுண்டத்தை யடைவார்கள்.

12. தைமாதம் முப்பதுநாளும், வேலாயுதக்கடவுளிருக்கின்ற கோயில் முழுதும் அகிற்புகையினால் வாசனை செய்பவர்கள் குலத்திலெல்லோரும் உருத்திரனாகச் சிவபிரான் திருவடியை யடைவார்கள்.

13. முருகக்கடவுளுக்குத் திருவிழா நடத்துவிப்பவர் ஆயிரம் ஜனனம் அரசராய்ப் பிறந்து முடிவில் கந்தக்கடவுள் பாததாமரையை யடைவார்கள்.

14. கார்த்திகை மாதம் முப்பதுநாளும் கந்தக் கடவுளாலயத்தில் நெய்விளக்கிட்டவர்கள் அவருடைய சாரூபத்தை யடைவார்கள்.

15. கார்த்திகைநக்ஷத்திரங்களிலே ஸ்ரீ சுப்பிரமணியமூர்த்தியைச் செவ்வியிலிருவேளையும் விதிப்படி அருச்சனை

செய்பவர்ஜன்மமெடுத்ததின் பலனைப் பூரணமாகச்செய்த பலனை யடைவார்களென்று பல வேதங்களும் எடுத்தெடுத்துச் சொல்லுகின்றன.

இனி வியாசமுனிவர் சுகமுனிவரை நோக்கி இப்பொழுது சொல்லப்புகுவது வேதப்பொருளாயுள்ளது, எல்லாருக்குஞ் சொல்லக்கூடாதது, உள்ளங்கை நெல்லிக்கனிபோன்ற பிரத்தியக்ஷமாயுள்ள ஷண்முகக் கடவுள் பூரணவடிவத்தின் சரித்திரமெனப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார்:—

குமாரக்கடவுள் வள்ளிநாயகியை விவாகஞ்செய்து ஜெயந்திமாநகரத்தில் திரிசுதந்திரருடன் எழுந்தருளியிருக்கும் சமயத்தில் வீரவாகுதேவர் ஷண்முகமூர்த்தியைப் பணிந்து ஸ்தோத்திரஞ்செய்து ஸ்வாமி உம்முடைய திருக்கோலக்காக்ஷியை அடியேன் தரிசித்து பூஜை செய்ய விருப்பமுண்டானதென பிரார்த்தித்து நின்ற வீரவாகுவைப் பார்த்து ஆறுமுகக்கடவுள் உன்னுடைய விருப்பத்திற்கு மிக்கமனமகிழ்ந்தனம். இப் பூலமண்டலமுழுதும் நாமே, பல அண்டங்களும் நாமே என ஆகாயமளாவிய ஓர் மண்டபத்திலே எழுந்து மனைவியரிருவரோடு சின் முத்திரையுடன் யோகாசனத்திலிருந்து திருவாயினாலே சொல்லலுற்றார்:—

சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்னும் முத்தொழிலினுள், சிருஷ்டித்தொழில் செய்யும் பத்து பிரமருக்குள் சதுர்முகப்பிரமனும், தேவர்களுக்குள் தேவேந்திரனும், வரகவிகளுக்குள் வியாஸமுனியும், சிவனடியாருக்குள் திருமாலும், குருமூர்த்தங்களுக்குள் தக்ஷிணாமூர்த்தியும், இருஷிகளுக்குள் அகஸ்தியரும், தேவரிஷிகளுக்குள் நாரதனும், பதினொரு ருத்திரர்களுக்குள் சங்கரனும், யோகிகளுக்குள் தத்தாத்திரயரும்,

வில்லிக்கைசகற்றவருக்குள் இராமனும், வேதபாராயண
ஆடிடர்களுக்குள் வசிஷ்டனும், சூரர்களுக்குள் கார்த்த
வீரியார்ச்சுனனும், பிதிர்களுக்குள் அரியமாவும், க்ஷத்
திரியருக்குள் புருகுதசக்கிரவர்த்தியும், சூரியகுலத்தரசர்
களுக்குள் இராமனும், சந்திரகுலத்தரசர்களுக்குள் தரு
மராஜனும், தனுஷ்யருக்குள் குபேரனும், அறிவுடையா
ர்களுக்குள் குருவும்(வியாழன்). வாக்குப்பொய்யாதவர்
களுக்குள் அரிச்சந்திரனும், யதுகுலத்தாருக்குள் கண்
ணனும், ஆடவர்களுக்குள்மன்மதனும், வலிமைசெய்வ[illegible]
[illegible]ருக்குள் யமனும், உயிரைக்கொண்டுபோகிற
வர்களுக்குள் யமனும், பரிசுத்தஞ்செய்கிறவர்களுக்குள்
வாயுவும் கிரீடிக்கிறவர்களுக்குள் கந்திருவருக்குள்சார
ர்களுக்குள் மாலியும், தேவப்பெண்களுக்குள் ஊர்வ
சியும், சதிகளுக்குள் பார்வதியும், வெள்ளைக்குதிரை
[illegible]க்குள் ...யும், யானைகளுக்குள் மாதா
அம், உலகங்களுக்குள் சிவலோகமும், பாதாளஸ்தலங்
களுக்குள் சேஷனும், நவகண்டங்களுக்குள் பரதகண்ட
மும், சமுத்திரங்களுக்குள் பாற்கடலும், நதிகளுக்குள்
கங்காநதியும், தீர்த்தங்களுக்குள் மணிகர்ணிகையும், சிவ
க்ஷேத்திரங்களுக்குள் காசியும், பருவகாலங்களுக்குள்
வசந்தகாலமும், மாதங்களுக்குள் ஆவணிமாதமும், நக்ஷ
த்திரங்களுக்குள் சந்திரனும், மலைகளுக்குள் மகாமேரு
வும், வனங்களுக்குள் சயித்திரவனமும், மரங்களுக்குள்
அரசமரமும், அக்கினிகளுக்குள் சரடாக்கியும், ஒளிகளு
க்குள் சூரியனும், மணிகளுக்குள் முத்தும், ஆபரணங்
களுக்குள் மேகலாபரணமும், பொருள்களுக்குள் சொர்ண
மும், பிரகாசமான பொருள்களுள் சூரியனுடைய உதய
கிரியும், அஸ்தமனகிரியும், தருமநெறிகளுக்குள் ஸத்தி
யமும், அஷ்டகஜங்களுக்குள் ஸார்வபௌம யானையும்,

பசுக்களுக்குள் காமதேநுவும், மிருகங்களுக்குள் ஸிம்ஹமும்.(சிங்கம்) வானரங்களுக்குள் அநுமானும், பறவைகளுக்குள் கருடனும், பாம்புகளுக்குள் ஆதிசேஷனும், எழுத்துக்களுக்குள் பிரணவ எழுத்தும், வேதசுரம் நான்கினுள் பிரசமவேதமும், கலைகளுக்குள் வேதங்களும், மந்திரங்களுக்குள் காயத்ரி மந்திரமும், பூஜைகளுக் குள் மானஸ பூஜையும், தவங்களுக்குள் பிராணாயாமமும். யாகங்களுக்குள் அசுவமேதயாகமும், ஆச்ரமங்களுக் குள் ஸந்நியாஸமும், காப்பியங்களுக்குள் இராமாயண மும், தருமசாஸ்திரங்களுக்குள் மனுதருமசாஸ்திரமும் ஞான சரிதங்களுக்குள் பகவத்கீதையும், வித்தைகளுக் குள் ஞானமும், தானங்களுக்குள் அபயதானமும், கற் புடைய பெண்களுக்குள் பார்வதியும்; வருணங்களுக் குள் பிராமணவருணமும், இந்திரியங்களுக்குள் ஹ்ருதய மும், சுவைகளுக்குள் லவணமும்,(உப்பு), தண்டனைகளு க்குள் யமதண்டனையும், நால்வகை யவஸ்தைகளுக்குள் யௌவனவஸ்தையும், கண்களுக்குள் சிறந்தமணி ஒளி யும், ஆகிய ஸமஸ்தங்களும் நானேயாகையால் அவை களை யெல்லாம் வேதாகம விதிப்படியறிந்து நடந்துவரு வாயெனத் திருவாய் மலர்ந்தருளினர்.

இம்மொழியைக்கேட்ட விரவாகுதேவரானந் தமேற்கொண்டு உள்ளம் பரவசமாகி ஷண்முகக்கடவு ளையே உள்ளன்புடன் துதித்த பின்னும்முருகக்கடவுளை நோக்கி சுவாமி! இன்னுமொரு விண்ணப்பந் தெரிவித் துக்கொள்ளவேண்டும். அடியேனாவது உம்முடைய விசு வரூபத்தைத்தரிசிக்க விரும்புகிறேன், காக்ஷி தந்தருள வேண்டுமெனவே,குமாரக்கடவுள் மிக்ககருணையுடனே

[illegible]

* [illegible]:—ஐச்வரியம், வீரியம், [illegible], ஞானம்,வயிராக்கியம்.

முன்னுள்ள திருமேனியைக் காட்டியருளவேண்டுமென
சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து வணங்கும் வீரவாகுதேவ
ரின் பிரீதியான அம்பிகைபாலராகிய ஆறுமுகக்கடவுள்
ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு புயங்களும், பன்
னிரண்டு கண்களும், பன்னிரண்டு குண்டலங்களுந் தோன்
றத் தமது இயற்கையான வடிவத்தைக் காட்டி தமது
திருக்கரங்களாலே அவரை எடுத்துப் பின் வருமாறு
சொல்லலுற்றார்:—

பிரமர்களும், ஜனகாதி முனிவர்களும் நந்தி
பிருங்கி முதலான சிவகணங்களும் நீடியதவஞ் செய்து
இந்த விசுவரூபத்தைத் தரிசிக்கப் பிரார்த்தித்தார்கள்.
அவர்கள் கருதியபடி தரிசனஞ்செய்ய, இனிவரும்
முதலாவது யுகத்தில் சூரபன்மன்முதலிய கொடிய அசு
ரரைக்கொன்று கந்தமாதனத்திலே மகிழ்ச்சியுற்றிருக்
குங்கால் நமது வீரவாகுதேவர் எமது விசுவரூப தரி
சனத்தை விரும்பியபடி காண்பிப்போம். அக்காலத்தில்
நீங்களுந்தரிசிக்கலாமென வாக்களித்திருந்தபடியே இது
சமயங்காண்பித்தோம். நீயும் பரிசுத்தம்பெற்றாய், இனி
யும் நமது ஷடாக்ஷரமந்திரத்தை வேதாகம முறைப்படி
தியானஞ்செய்து வந்தால் அளவற்ற பிரம கற்பங்கள்
சென்றமுடிவிலே நமது பாததாமரையாகிய மோக்ஷத்
தைத் தருவோமெனவே வீரவாகுதேவரும் மனமகிழ்ந்
து சடாக்ஷரதியான மந்திரயோகத்திலேயே மூழ்கியிருந்
தனர். மேற்சொல்லிய விசுவரூபத்தைக் கண்டு தரி
சித்த முனி சிரேஷ்டராகிய நாரதமுனிவர் மிக்கப்பேர
ன்புகொண்டு பாற்கடலினடுவேயுள்ள சுவேதத்தீவினி
டையில் வைகுண்ட பட்டணத்தின்கண் ஆயிரக்கால்

மண்டபத்தில் சேஷசயனனாகிய ஸ்ரீமந்நாராயணக் கடவு ளின் முன்னேவவே ப்ரிவிஷ்வமூர்த்தி அம்முனிவருக் கு அருந்ய பாத்ய ஆசமனீயம் முதலியவை வேதமந்தி ரத்துடன் கொடுத்து ஆஸனத்திலிருத்தி ஆங்கு வந்த விசேஷத்தைச் சொல்லவேண்டுமென வினவ, ஸ்ரீ நாரத முனிவர் மனமகிழ்ச்சியுடன் சொல்லலாயினார்:—

ஆறுமுகக்கடவுள் பரதகண்டத்திலே தென் றிசையிற் பாண்டியநாட்டிலே இயலிசை நாடகமென் னும் முத்தமிழ்வளமுங்கூடிய தாம்பிரபருணி (தாம்பிர வன்னி) நதிவளமுஞ்செழித்த திருச்செந்தூரிலெழுந்தரு ளி, வீரவாகுதேவருக்காகக்காட்டிய ஆனந்தமயமாகிய விசுவரூபக் காக்ஷியை, தரிசித்த மனமகிழ்ச்சி எம்முள் ளத்தடங்காமையினால் உம்மிடத்திலுஞ்சொல்லிசந்தோ ஷிக்கவந்தேனாயினும், நீர் பாரதயுத்தத்திலே அருச்சுன னுக்காகக்காட்டிய விசுவரூபத்தையும், தண்டகாரணி யத்திலே ஸ்ரீபரமேசுரன் காட்டிய விசுவரூபத்தையும், வேதிகாச்சிரமத்திலே, காலாக்கினி ருத்திரக்கடவுள் காட்டிய விசுவரூபத்தையும், பிரமன் சிருஷ்டித்தொழி லுக்காக சிவபிரான் மகாமேருமலையினிடத்தும் பூர்வ காலத்திலே காட்டிய ஆனந்தத்திருக்கோலக் காக்ஷியை யுங்கண்டு மனக்களிப்படைந்தனைக்கு மனோவாக் குக்கெட்டாத ஸ்ரீகுமாரக்கடவுள் கொண்டிருந்த காக்ஷி யானது மென்மேலும் மனமகிழ்ச்சியைக்கொடுப்பதினை லிவ்வற்புதக்காக்ஷியையும்மிடத்தே சொல்வதற்காகவே [illegible] சொல்லிய ஸ்ரீ நாரதமுனிவரைப்பார்த்து [illegible] முனிவரே! நான் சொல்லும் உபதேசத்தைக் கேட்க வேண்டுமெனச் சொல்லத்தொடங்கினார்:—

ஸ்ரீ சுப்பிரமணிய மூர்த்தியின் மகிமை.

1. நாம் பெரிதும் வணங்கும் ஆறுமுகக் கடவுளின் திருமுகங்கள் ஆறும் = சிவபிரானது ஐந்துமுகமும் எனது ஒருமுகமுமாம்,

2. அவருடைய பன்னிருகைகளும் = சிவபிரானது எட்டுக்கைகளும் எனது நான்கு கைகளுமாம்.

3. அவரது வேலாயுதம் = பரமேசுவரனுடைய சூலாயுதம் என்னுடைய சக்ராயுதமும் ஒன்றுசேர்ந்த ஒன்றினுடைய வேலாயுதமாம்.

4. வள்ளிநாயகி = எனது வலக்கண்ணினின்று தோன்றிய இச்சாசக்தியாம்.

5. தெய்வானை = எனது இடக்கண்ணினின்று தோன்றிய கிரியாசக்தியாம்.

6. ஸ்ரீ சுப்பிரமணியருடைய திருமேனியே பரப்பிரம சொரூபமாகும்.

7. சுப்பிரமணியனென்னும்பெயர் மூன்றுபதங்களும் உம்மூன்று பதங்களுள் நடுவிலுள்ள பதம் சிவமே [illegible] தும் - நடுவிலுள்ள பதம், என்னுடைய வடிவமாகும். முதற்பதம் மற்ற இரண்டு பதங்களையும் தன்னிற் சேர்க்கும். ஆதலால் பரமேசுவரனும் நானுமே சுப்பிரமணியக்கடவுளாக விருப்பதென வேதங்களை சொல்லும். இன்னும் சுப்பிரமணியன் என்று சொல்லும் [illegible] முதற்பதமாகிய சுப் - வென்பது [illegible] கொல்லும் [illegible]தும், இரண்டாவது

[illegible] அனாதியென்பது [illegible] என்பதாம். [illegible] காரியனை [illegible]. முன் [illegible] பல-என்பது [illegible]. [illegible] வலைபல-என்பது [illegible] நான் [illegible]. மேலும் குமார [illegible] இருப்பதாகும். [illegible] [illegible], [illegible], [illegible], [illegible] நான்கு [illegible]. அவைகளில் [illegible] சொல்லுகிறேன். [illegible] மலையில் [illegible] குமார [illegible]. பிரதமை-துதிகை-திரிதிகை [illegible], பூமிதேவி-இலக்ஷ்மி-பார்வதி [illegible]. சதுர்த்தி-பஞ்சமி-ஷஷ்டி [illegible] ருத்திரன்-[illegible]னன்-சிவன்-[illegible] [illegible]. [illegible] [illegible] முதலிய [illegible] [illegible]. [illegible] தினங்களில் [illegible] [illegible] குமாரக்கடவுளுக்கு [illegible]. [illegible] [illegible] சகல [illegible] [illegible]. பின்னும் பிரணவ [illegible] அகரம் [illegible] உகரம் [illegible] மகரம் [illegible]. [illegible] உகரம் [illegible] அகரம் [illegible] மகரம் [illegible] சொல்லக்கேட்ட [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] வியாசமுனிவர் [illegible]

மைக்குச்சொல்லி பின்னும் சிலஸந்தர்ப்பங்கள்சொல்லு கிறேனென்றும் சொல்லலுற்றார்:—

1 பூத, பவிஷ்ய, வர்த்தமானமென்னும் திரிகாலவர்த்தமானங்களைத்தெரிந்தவராயும், காம, குரோத, லோப, மோக, மத, மாத்சரிய முதலிய ஆறுவித குற்றங்களைப் போக்கினவராயும், பரமேசுவரன் திருவடியைச்சார்பவருமாகிய துருவாஸமுனிவர் ஆகாயமார்க்கமாக ஸ்வர்க்கத்துக்குச் செல்லுகையில் வழிமத்தியிலே ஓர் தெய்வப்பெண்வந்து வணங்கி அதிமநோகரமான வாஸனையுள்ளபுஷ்பமாலை யொன்றைக் கொடுத்தனள். அம்மாலையை தமதுகரத்திலேவாங்கி முடியிலும் முகத்திலும் மார்பிலுமணைத்துக்கொண்டு அப்பால்செல்லுகையில் நான்கு கொம்புடன் அயிராவதமென்னும் பெயரை வகித்த வெள்ளையானையின்மீது தேவேந்திர மகாராஜன் வருவதைக்கண்டு, மனமகிழ்ந்து அவ்வழகிய மாலையை தேவேந்திரனுக்குக் கொடுக்கவே அவ்விந்திரன் அம்மாலையைவாங்கி தமதுவெள்ளையானையின் மத்தகத்திலே சூட்டினான். அந்தயானை அம்மாலையை தனது தும்பிக்கையினால் எடுத்துச்சிதைத்துவிசிறெறிந்ததைப்பார்த்தமுனிவர் அத்யந்தகோபாவேசங்கொண்டு அவ்விந்திரனைப்பார்த்து, அறிவற்றமூடா! தேவருலக ஐசுவரியாளுகின்ற செருக்கினாலன்றோ யான்கொடுத்தமாலையை அவமதித்து யானையின்மீது வைக்கவும், அது அம்மாலையை எங்கண்முன்சிதைக்கவும், நேர்ந்தது. இப்பாவத்துக்கும் உன்னைவிட்டு “இனிப்பதவியும்வாழ்க்கையும் இலக்ஷ்மியும் விட்டுநீங்கி துன்பமுற்றுத் திரிவாயாக” வெனச்சபித்தனர். பின்னுஞ்சற்று மனமிரங்கி”,

"கெடுவரும்பின்னே மதிகெட்டுவரு முன்னே" என்பது. இப்பாவத்தைச் செய்த [illegible] ஓர்வழி சொல்லுகிறேன் கேள், "[illegible] செய்த குமாரக்கடவுளெழுந் தருளியிருக்கும் [illegible] மலையின்கண்சென்று ஷண்முக[illegible] இத்தவத்தைச்செய்துகொண்டிருப்பாயாகில் சிலகாலத்திற்குப் பின்பு, தேவர்களெல்லாம் [illegible] அறுமுகக் கடவுளும் அவ்வறுமுகக்கடவுள் [illegible] தோன்றவும் அவன் உன்னைப்பார்க்கவும், [illegible] அச்சன் முகக்கடவுள் கிருபாகடாக்ஷத்[illegible] வும் நீ இழந்த வைபவங்கள் யாவும் உனக்குக் கிடைக்க வும்பெறுவாய்" என்று சொல்லிப்போயினர். [illegible] [illegible] மெய்ய [illegible] [illegible], கற்பகதரு, தெய்வப்பெண்கள், [illegible] வு, சங்கநிதி, பதுமநிதி, இந்திராணிமுதலிய [illegible] வைபவங்களும் தன்னைவிட்டு நீங்கி, [illegible] [illegible], திருச்செந்தூர் ஷண்முக[illegible] [illegible] வந்தடைந்து, வணங்கி[illegible] செய்துகொண்டிருக்கையில் சிலகாலங்கழிந்தபின் [illegible] [illegible] சொல்லியவாக்குப்படியே [illegible] [illegible] அறுமுகக்கடவுள் [illegible] தோன்றவே இந்திரன் அவ்விலக்ஷணமிலை [illegible] [illegible]களும் நீங்கி ஷண்முகார்ச்சி[illegible] [illegible] சகலவைபவங்களையும் [illegible] [illegible] அரசுபுரிந்திருந்தான்.

இந்திரன் அரசுபுரிந்து தேவேந்திரபுரத்தில் [illegible] செய்துகொண்டிருக்கையில் ஐராவதமாகிய வெள்ளை

யானையானது மனது அரசனுக்கு விளைந்த தீவினைக்கு காரணம் யாதெனவா? செய்த தீவினை செய்தவர்களை விட்டுப்போகாதாகையால் இப்பாவத்தினின்றும் கடை யேறுவதற்கு ஷண்முகக்கடவுளை வணங்கி யர்ச்சிக்க வேண்டுமென நினைத்து, நாரதமுனிவரை யடுத்துத் தமதிஷ்டத்தைப் பூர்த்திசெய்வதற்கான ஓர் மந்திரத்தையுபதேசித்தருளும்படி வேண்ட, உடனே முனிவர் ஷடக்ஷர மந்திரத்தையுபதேசித்தருளினர், அவ்யானை முருகக்கடவுளை தியானித்துக்கொண்டு ஜெயந்திமாநகரத்தையும் அதன் பஞ்சக்குரோசத்தெல்லையையும் பிரதக்ஷிணஞ்செய்து ஆகாயகங்கையினின்றுங் கொண்டுவந்த தாமரை புஷ்பங்களினால் ஷண்முகமூர்த்தியை இராப்பகலாய் ஐந்துநாள் பூஜைசெய்து அக்கடவுளின்கருணையினால் சாபம் நீங்கி முன்போலவே தேவேந்திரனிடம் போய்ச்சேர்ந்து சுகமேயிருந்தது.

2. சிவாகமமுறை தவறாமற் பிரதிதினமும் எட்டுங் காலமும் எட்டு வகுப்பினர் ஜாமந்தோறும் ஷண்முக மூர்த்திக்குப்பூசை செய்துவருவார்கள். விவரமாக பகற்காலத்தில் முதற்சாமத்தில் பிரமதேவனும், இரண்டாஞ்சாமத்தில் அனேகமுனிவர்களும், மூன்றாஞ்சாமத்தில் கிந்நரர் கந்திருவர்களும், நான்காஞ்சாமத்தில் திக்குபாலர்களும், இராக்காலம் முதற்சாமத்தில் இலக்ஷுமி முதலியசத்திகளும், இரண்டாஞ்சாமத்தில் அவுணர்களும், நாகர்களும், மூன்றாஞ்சாமத்தில் வள்ளிநாயகியுந் தெய்வயானையம்மையும் நான்காஞ்சாமத்தில் கிருஷ்ணையுங் கங்கைமுதலிய நதிகளுமே.

3. சிதம்பரத்தில் நடராஜப்பெருமானை சேவித்துக் கொண்டிருந்த [illegible] வியாக்கிரபாதமுனிவர் ஒருநாள் நடராஜரை நோக்கி, சுவாமி! தமது திருவருளால் [illegible] கங்காநதி முதலிய புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து [illegible] முதலிய சிவஸ்தலங்களை தரிசிக்க [illegible] கவலைகொண்டிருக்கிறேன், நடராஜப்பெருமான் "அங்ஙனமே ஆகக்கடவது" திருவாருள் செய்தருளினதினாலே, அம்முனிவர் யாத்திரைசென்று பூலோகத்தின் கண் [illegible] அனேக புண்ணிய [illegible], பற்பல சிவஸ்தலங்களையுந் தரிசித்து, கடைசியாக [illegible] வந்து சேர்ந்து, கோமாரியில் [illegible] ஜெபத்திபுரம் [illegible] வேதாகமவிதிப்படி [illegible] செய்து, அஜ்ஜெபத்தோமாக [illegible] பரிசுத்தஞ்செய்தும்பார்த்து, [illegible] பாகசாலையில் [illegible] பாகங்கள் செய்வித்து, [illegible] அனேகர்களுக்கும் [illegible] வேதாகம [illegible] செய்தனர். [illegible] முனிவர் [illegible] கோதாவரி [illegible] பாகம் முடிந்தவுடனே * அவபிருதஸ்நானஞ் செய்

---

* அவபிருதஸ்நானம்:—பாகம் முடிந்தவுடன் செய்யும் ஸ்நானம்.

வந்ததாக யாகசாலையினின்று அருகாமையே வெளியாகியாக
வெழுந்தருளிய முனிவர் யாகம் முடிந்த அவ்விருவ
ர்களை நோக்கி, "இத்திருக்கைலாயமென வேதாரணி
யம் பிற க்ஷேத்திரங்களைக் காட்டிலும் மேலாகியதால் இ
வ்விடத்திலே எல்லாத் தீர்த்தங்களும் நான்கு
வேதங்களும் தங்கும் என்று பிரமாவோமிவ வண
வென்று, காமதேனுவும் வேதமாதாக்கும் கன்
றுக்குக்குதிரையாக சிறப்பாக இருந்துகொண்டிருப்பா
ரென்று" ஆசீர்வதித்து, யாகத்தை முடித்த பொன்பின்
பிருங்கிமுனிவர் ஷண்முகக்கடவுளைத் தூக்கி தியானித்த
வராய் கைலைக்கோதிருப்பிடமாகிய கிருதாகாசமெனும்
ஸ்ரீபாதசேஷத்திரத்திற்குச்சென்று நடராஜப்பெருமான்
திருவருளால் பரபோகத்தையநுபவித்திருந்தனர்.

4. இதுநிற்க, அருந்தவத்திற் சிறந்த 1. வசிஷ்டர், 2 வாமதேவர், 3. சாபாலி, 4. காசிபர், 5. மார்க்கண்டர், 6. கவுதமர், 7. முற்கலர், 8. கௌசிகர்முதலிய இவ்வெட்டு மகரிஷிகளும் காசி க்ஷேத்திரத்தையடைந்து வெகுகாலந் தவஞ்செய்துகொண்டிருந்து காசிவிசுவேசருடைய திருவருளால் இஜ்ஜெயந்திபுரத்தை யடைந்து, ஆங்குள்ள இருபத்திநான்கு தீர்த்தங்களிலும் மூழ்கி குமாரக்கடவுளைத் துதித்து அவரது திருவருளைப்பெற்றார்கள்.

1—வது இவ்வுலகத்தின்கண் மோக்ஷத்தைக் கொடுக்கும்ஸ்தலங்கள் பலஉளவாயினும் இத்திருச்செந்தூரே அவைகளெல்லாவற்றினும் மேன்மை பெற்றதென வஸிஷ்டமுனிவர் சொல்லினர்.

2-வது [illegible] வி[illegible] [illegible] [illegible] [illegible] வாமதேவமுனிவர் கூறினர்.

3-வது [illegible]த்தின்கண்ணுள்ள சகல புண்ய தீர்த்தங்களின் பலன்களையும், இத்திருச்செந்தூரின்கண்ணுள்ள கந்தபுஷ்கரணியின் தீர்த்தபலனையும் [illegible]. கந்தபுஷ்கரணி [illegible] விசேஷமென சாபாலிமுனிவர் உரைப்பாய்ச்சொல்லினர்.

4-வது ஏகாதசிமரணபரியந்தம் பிரயாகையிலே தவறாமல் ஸ்நானஞ்செய்த பலனைப் பார்க்கிலும் * விருச்சிகமாதத்துக் கார்த்திகை நக்ஷத்திரத்தில் [illegible] தீர்த்தத்தில் மூழ்கி ஷண்முகக்கடவுளைத் தரிசித்தவர்கள் கோடிகோடி பலனையடைவார்களென காசிபமுனிவர் சத்தியமாகக்கூறினர்.

5-வது [illegible] காலத்தில் மணிகர்ணிகை தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வோரடையும் பலன் இத்[illegible]ம்வந்து வேலாயுதக்கடவுளை வணங்குகிறவர்களுக்குங் கிடைக்குமென பதினென் புராணங்களுஞ் சத்தியமாய் [illegible] மார்க்கண்டமுனிவர் சொல்லினர்.

6-வது இந்திரயோகத்தில் ஒருநாளிருந்து ஸ்ரீ சுப்ரமண்யமூர்த்தியை தரிசித்தவர்களுக்கு தங்கள் இஷ்டசித்திகளெல்லாம் கைகூடுமென கவுதமமுனிவர் கூறினர்.

---

* விருச்சிகமாதம்:—கார்த்திகைமாதம்.

7-வது ஜெயந்திபுரத்தின் மகிமைகளையும் ஸ்ரீ வேலாயுதமூர்த்தியின் மேன்மையையும் எடுத்துரைப்பவர்களுக்கு கோடி புண்யமுண்டாகுமென முற்கல முனிவர் சொல்லினார்.

8-வது நூறு அசுவமேதயாகம் நூறு வாஜபேயயாகம் செய்ததாலும் ஜனனமாரப்ய மரணபரியந்தம் மற்றைய ஸ்தலங்களில் செய்ததாலும் இந்த திருச்செந்தூரிலிருப்பவர்கள் பிரதிதினமும் பெறுவார்களெனப் பிரமதேவர் ஸனகாதி முனிவர்களுக்கு அருளிச்செய்தனவென கோசிகமுனிவர் ஆணைவைத்துச்சொல்லினார்.

5. தவிரவும், கந்தஷஷ்டி தினத்தில் ஓர்தரம் முழுகுவதால், அதிக்ஷயவாரத்தில் * மாகமாதம் முப்பது நாளும் முழுகிய பலன்கிடைக்கும்.

6. இதுவுமன்றி, இன்னுமொரு விசேஷகதையும் சொல்லுகிறேன். அதாவது யாவர்க்குந் துன்பத்தை விலக்கி விசேஷ பத்தாகிய புத்ரபாக்யத்தைக் கொடுக்கக்கூடியது. அந்த சந்தானவிரத பெருமையேயாம். ஆதியந்தவசிஷ்டரான காசியபமகாமுனிவர் பத்தினி அதிதி யென்பவள் புத்ரவாஞ்சையினால், பிரமபுத்திரரான நாரதமகாமுனிவரிடம் வணங்கித் தனது விருப்பத்தை பூர்த்திசெய்விக்கும்படியான ஓர் விரதம் அருளிச் செய்யவேண்டுமெனவே, அந்நாரதமுனிவர் குமாரக் கடவுளுக்கு மிக்க மனமகிழ்ச்சியைக் கொடுக்கத்தக்க விரதமாகிய சந்தான விரதத்தின் முறைமையை வேதாகமவிதிப்

* மாகமாதம்=மாசிமாதம்.

[illegible] அருகில் வருபவரை விளிக்கலாயினர்.

* விருச்சிகமாதத்துப்பௌர்ணமிதினத்தில் ஜெயந்திபுரத்தில் கந்தபுஷ்கரணி முதலாகிய இருபத்திநான்கு புண்யதீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து, வேத மந்திரங்களினால் சங்கல்பஞ்செய்துகொண்டு மறுபடியும் அவ்விருபத்திநான்கு தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து மௌனமாக பன்னிரண்டு முறை முருகக்கடவுள் ஆலயத்தை வலப்பிரதக்ஷணஞ்செய்து, ஷண்முகக்கடவுளை தரிசித்து †மாப்பாட்டுக்குச்சென்று, அங்கு [illegible] முருகக்கடவுளை யெதிர்நோக்கியிருந்து வலக்கைப்பெருவிரலினால் [illegible] மேற்பக்கத்தில் [illegible], கீழ்பக்கத்தில் முக்கோணச் சூலவடிவமும் [illegible] வேலாயுதவடிவமும் [illegible] பூஜைசெய்து, பன்னிரண்டு [illegible] ஷண்முகக்கடவுள் தி[illegible] கண்ட [illegible] "[illegible]" என்று [illegible] சொல்லி சமுத்திரத்தில் ஸ்நானஞ்செய்து மௌனமாக ஆலயத்தின் ஸன்னிதியை யடைந்து [illegible] கும்பம் ஸ்தாபித்து [illegible] அக்கும்பதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து [illegible] பன்னிரண்டு வேதப்பிராமணர்களுக்கு [illegible] அன்னதானஞ்செய்து ஷடாக்ஷரத்தை தியானித்து வேலாயுதக்கடவுளை

* விருச்சிகமாதம் = கார்த்திகைமாதம்.

† மாப்பாடு = சூரபத்மன் இறந்தவிடம்.

மனையில் வைத்து அந்த உபவாஸமிருந்து மறுநாள் கா லையில் முறைப்படி பாரணஞ்செய்யவேண்டும். இவ்வி தமே பங்குனிமாதங்களிலும் வரும் பங்குனி பௌர்ணமியிலும் விரதமிருந்து அடுத்த கார்த்திகைமா தத்து பௌர்ணமியிலு மவ்விதமே உபவாஸமிருந்து வேதப்பிராமணர்களுக்கு கோதான முதலிய ஷோடச மஹாதானங்கள்செய்து ஸ்ரீசுப்பிரமணியக்கடவுளுக்கு அ திமனத்திருப்தி செய்தவர்கள் தம் தம் விருப்பங்களின் பலனையடைவார்களென்பது எக்காலத்திலுந்திண்ணம். இவ்விதம் இவ்விரதத்தைச்செய்பவர்கள் பிராமணர் களாயின் கலைகளுணருஞ் சந்தானசம்பத்துக்களையும், க்ஷத்திரியர்களாயின் பகைவர்களை வெல்லும் வலிமையு ள்ள சந்தானசம்பத்துக்களையும், வைசியர்களாயின்குபே னுக்குமேலான சம்பத்தையுடைய சந்தானத்தையும், சூ த்திரர்களாயின் நற்பதவிபெறும் சந்தான விருத்தியை யும், பெற்றுவாழ்வார்களென்பது ஸத்தியம், என நார தமுனிவர் அருளியபடியே அகத்தி கேட்டு, அவ்விரதத் தை விதிப்படி முடித்து சரவணபவன் திருவருளாலே இந்திரனையும் உபேந்திரனையும் பெற்று சிறப்புடனின் பவளாயிருந்தாள்.

7. இலிங்கதவத்தின் முறைநெறி சற்றும் வ ழுவாத ஓர் பிராமணன் நான்குவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்திநான்கு கலைஞானம் முதலியவைகளுங்கற்று * அறுவிதமதவிகற்பங்களையுமுணர்ந்து வெகு காலம்

* அறுவிதமதவிகற்பங்களாவன: வைதிகம், சைவம் வயிணவம், வாமம், சவுரம், காணாபத்தியம்.

வாய்ந்த அகோரத்விளையாகிய தீவினைவசத்தால் தாய், தந்தை, குரு, சிவன், அயன், மால், பிராமணர், மந்திரம் தீர்த்தம், தலம், தருமம், வேதம், புராணம், சாஸ்திரம் பரமாகமம் முதலியவைகளை நிந்தித்து கண்டனஞ்செய்து, "கண்டதே சாஸ்திரம் கொண்டதே கோலம், சிற்றின்பங்களனுபவிக்கப்படும் கண்ணாற் காணப்படுவதே நிஜம். காணப்படாதவைகளெல்லாம் பொய், இவ்வுலகில் சுவர்க்கம் நரகமென்பவர் யாவர்? அவைகளை நேரில் கண்டவர் யாவர்? புண்ணியம் பாவம் என்பது யாது?" என வேதநெறி வழுமுறை தவறி வெகுகாலம் முறைதப்பி நடந்து வாழ்நாளளவு நாயுறு துன்பங்களை முதிர உயிர்விட்டிறந்தான். அவனை யமதூதர்கள் பாசத்தினாற்கட்டி யமதர்மராஜன் சமூகத்தில் விடவே அவ்வரசன் விசாரணைசெய்து இரும்புக்கட்டுகொடு நரகத்திலே தள்ளிவிட அநேகாயிரம் வருடம் நரகத்திலேயே தள்ளிவிட்டார்கள். நெடுங்காலம் சென்று பின்னர் பாண்டியநாட்டில் பலதரமாகப் பிறக்கும் முந்தியஜென்மத் தவப்பயனால் இத்தீர்த்தத்தை யடைந்து, அவ்வுயிர் நீங்குவதற்குமுன் கடவுள் திருவருளால் அக்கொடும்பாவ நீங்கித் திவ்யவிமானத்தேறிப் பிரகாசிக்கொண்டு வைகுந்தஞ்சேர்ந்து இந்நாள்வரையும் சிவனுடன் அங்கே வாழ்ந்துகொண்டிருக்கின்றான்.

8. இவைகளன்றி இன்னமும் கேளுங்கள். சிர் முட்டுடைய மிலேச்சனொருவன் மிக்கப்பொருளாசையினால் இராப்பகலாய்க் கப்பல் யாத்திரைசெய்து, எதிரேவரும் கப்பற்காரரையெல்லாம் கொன்று வழிப்பறிச்செய்

ரி அவர்கள் பொருள்களை யெல்லாங்கைப்பற்றி சகல உயிர்ப்பிராணிகளுக்கும் தீங்குசெய்து வேதபிராமணர்களுடைய யாகப்பசுக்களையெல்லாம் சினையுடனேகொன்று தின்றுகொண்டு காலங்கழித்து தமது புலைச்சமயமே சமயமெனவும் மற்றையமெய்ச்சமயத்தார்களுடைய தலைகளை யறுத்து பாவத்தையே சுமையாகத்தாங்கித் திரியுங்கால் ஒருநாள் திருச்செந்தூரடைந்து திருக்கோயிலினுள்ளேபோய் ஆங்கு முருகக்கடவுளைத்துதித்துக் கொண்டிருக்கும் திரிசுதந்தரர்களைக்கண்டு இவ்வாலயம் யாது? இவ்வுருவம்யாது? எனவே. அவர்கள் பரமேசுவருடைய புத்திரராகிய ஆறுமுகக்கடவுளிவரே, தம்மையடைந்த பத்தர்களின் துன்பத்தை ஒழிக்கும் பரம்பொருளுமிவரே, சூரபன்மன்முதலிய அசுரர்களைக்கொன்று தேவசேனாபதியெனப் பெயர்வகித்த வேலாயுதமூர்த்தியுமிவரே என்ற பிரதிமொழியைக்கேட்ட அத்துஷ்ட மிலேச்சன், சங்கரன்யாவன்? வேலாயுதமூர்த்தியாவன்? எனக்கடுங்கோபங்கொண்டு, ஓர் நீண்டவாளாயுதத்தை கரத்திற்பிடித்து அதிவேகமாய் ஷண்முகமூர்த்திக்கு முன் ஓடிச்செல்லவே ஓடியவேகத்தினால் காலிடறித்தட்டுக்கெட்டுத் தடுமாறி கீழே விழுந்திறந்த நிலைமையானது முருகக்கடவுளை அதியந்தபக்தியுடன் வணங்கி நமஸ்கரிக்குந் தொண்டர்களைப்போலிருந்தது. உடனே இயமதூதர்கள் பாசக்கயிற்றினால் மிலேச்சனை கட்டவருங்கால், ஆங்குதொழுதிருந்த கணநாதர்கள் வந்து எங்கள் குமரேசன் திருவடியை யடைந்த இவனை விட்டுவிடுங்களென விலக்கவே, இயமதூதர்கள் இயமனிடம் சென்று நடந்த சங்கதிகளை யெல்லாம் விபரமா

ர்த்தி தரிசிக்க, கசிந்துருகும்பொன் றடியவன் தாயேனே சரி
ல் வழி விசேஷப் ஜெயத்திரமடைந்து ஆறுமுகன்முத்
யனைதாரியாய் வள்ளியம்மையும் தெய்வயானையம்மையும்
இருபக்கத்திலுஞ் சூலங்க, கிரீடதாரிகளும் அநேகபட
ரிஷிகளும் வணங்கப்பெற்ற ஷண்முகக்கடவுளின் திரு
க்கோயிற் காக்ஷியைத் தரிசித்துத் தாமுந் தலைவணங்கிப்பல
வாறு துதித்து ஸ்தோத்திரித்த இயமனை முருகக்கடவு
ள் திருவருள் கடாக்ஷ கண்ணோக்கி உனது ஸ்தோத்திர
த்தால் மிக்க மகிழ்ச்சியடைந்தோம். இவ்விடம் வந்த
காரணம் யாதெனவினவ, தக்ஷணாதிபதியாகிய
இயமன், சுவாமி! யான் பாபிகளானது கருணையினா
ல் புண்ணியஞ்செய்தவர்களை சுவர்க்கத்திலும் பாவஞ்
செய்தவர்களை நரகத்திலுமாக வேதங்கள் முறையாய்
ச் சொல்லியபடியும், மநுவின் தருமசாஸ்திரப்படிக்கு
ம் தீர்ப்புச்செய்துகொண்டு சாக்ஷிகாரனாக
விசாரணைசெய்து சிவபெருமான் திருவாக்கிற்குப் பயந்
து, அநேகர்கள் வினைப்பயனை யனுசரித்தாராய்ந்து தீர்
ப்புச்செய்யுந்தன்மையுடையோனாகையால் இப்போ இந்த
ச்சிறு விழுந்துவிடக்கூடும் இக்கொடியபாதகர்களைக் கட்டிப் பூ
த்துவரும்படி விடுத்த யமதூதர்கள் இவனைத் தொ
டர்ந்து முன்னேற நமது கணநாதர்கள் என்னுடைய தூதர்
களையும் அடித்துத் துரத்தி இவனையுமெனது பாசாயுதத்
தைவிட்டுத் தப்புவிக்க காரணம் யாது? எனக்கேட்ட இய
மனை ஷண்முகக்கடவுள் நோக்கி "(1) கற்றவர்களானாலு
ம் (2) செல்வமிகுந்தவர்களாகிய கடையர்களானாலும்,
(3) ஞானமுள்ளவர்களானாலும் (4) அறிவில்லாதவர்

களானாலும் (5) காமக்கடலில் மூழ்கினவர்களானாலும் (6) தமது பரம்பரைத் தொழிலைக் கைவிட்டவர்களானாலும் (7) தீவினைப் பற்பல பாவங்களையே செய்தவர்களானாலும், (8) மதுபானஞ் செய்தவர்களானாலும், (9) ராஜபத்தினி, குருபத்தினி, சகோதரர் பத்தினி, தமது மருமகள், தமது பத்தினியின் தாய், தமது சகோதரி, தமது தாய், தமது புத்திரி, விதவை முதலியவர்களைப் புணர்ந்தவர்களானாலும், (10) கோஹத்தி, சிசுஹத்தி, ஸ்திரீஹத்தி, பிரமஹத்தி முதலிய கொடிய கொலைபாதகங்களைச் செய்தவர்களானாலும்,(11) எவ்வித கொடிய பாபத்தைப் பெற்றவர்களானாலும்" நமது திருவருளை நாடி இச்ஜெயந்தி விரதத்தையடைந்தவர்கள் அவைகளினின்று விடுபட்டு நமது திருவடியை அடைவார்கள். இவ்வாறே இச்ஜெயந்தியம்பதியையும் அடைந்த நமது திருச்செந்தூர் நகரம் வரும் வார்த்தைபாடி, நமது ஆறு திருமுகங்களையும் தரிசித்து நமக்கெதிரேயுமுயிர்துறந்ததனால் நமது பாதாரவிந்தமாயாகிய மோக்ஷத்தைப் பெற்றான் எனச்சொல்லியருளியதை இயமன் கேட்டு திரிலோகமே ஷண்முகக்கடவுளை ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து வணங்கி விடைபெற்றுக்கொண்டு தமது இராஜதானியாகிய வைவஸ்வதபட்டணம்போய்ச்சேர்ந்தான்.

9, இவைகளுந்தவிர இன்னுமொருகதையையுங் கவனியுங்கள். இப்பாரதகண்டத்தின்கண் ஷண்முகக் கடவுள் எழுந்தருளியிருக்கும் க்ஷேத்திரங்கள் பதினெட்டு. அவையாவன:—

இமயமலையின் பக்கம் திரிமூர்த்திகளும் காவல்கொண்ட இந்திரநிலமென்னும் பட்டணத்தில்தேவர்களை

டங்கள் திரள்கொண்டு குமாரக்கடவுளுக்கு தேவர்சேனாதி பதியெனப்பட்டங்கொடுத்து மணிமுடிசூட்டி. அபி ஷேகஞ்செய்ததினால் ஆறுமுகக்கடவுள் அபிஷேக குமாரன் எனப்பெயரை வகித்தங்கெழுந் தருளினர்.

2. கந்தமாதனக்கிரியில் ஞானசக்தியென்னும் சத்தியால் பரமேசுவரனருளிய கலைகளையுணர்ந்து சிவமா ருக்கர் எனப்பெயரை வகித்தனர்.

3. பொதியமலையின் மேற்பக்கத்தில் குமார தாரை தீர்த்தக்கரையின்கண் வேதாகமப்பிரமாணங்களிட்டு வி ரதங்களை மேற்கொண்டு குமாரப்பிரமசாரி எ ன்னும் பெயரை யடைந்தனர்.

4. பழநிமலையில் கிழப்பருவத்தோற்றங்கொண் டு பலமுனிவர்களுக்கு ஞானமுணர்த்தி ஞானதேசி கன் என்றபட்டத்தை யடைந்தனர்.

5. சுவாமிமலையின் பிரணவமந்திரத்தின் பொருளைச் சிவபிரானுக்கு உபதேசித்து அவருக்குங்குருவாகி சுவாமிநாதர் என்னும் திருப்பெயரை வகித்தனர்.

6. விந்தியமலையின் ஓர் பாகத்திலுள்ள விசாகப்பட்டணத்தில் தேவர்கள் வணங்க தெய்வானை யம்மையை விரும்பிய கலியாணக்கோலக்கந்தரன் என வழங்கினர்.

7. குறிஞ்சிக்குலத்துக்குத் சித்திரசேனனென்

யும் ஆசான் ஞானகிரியிலே புரிந்த அதிசயசமத்திற்கு மனமகிழ்ந்த குமாரக்கடவுள் அவ்வாசனிச் சித்தவாறு மதுராநகரத்தில் சிவபிரான் நடத்த அறுபத்திநான்கு திருவிளையாட்டுக்கோலங்களும் தனித்தனியே காணும்படி நடித்துக்காட்டி திருப்பரங்குன்றத்தில் நடனநாதன் என்னும் பெயரைக்கொண்டனர்.

8. தேனருவி சொரியும் பொதியமலையின் தெக்ஷிணபாரிசத்தில் பதினொரு சிவஸ்தலங்களுக்கு மேற்பாகத்தின் மலைச்சாரலிலே வணங்கிய பிரமதேவனுக்கு சிருஷ்டிப்பையும் ஞானபோதனையையும் உபதேசித்து போகமோக்ஷத்தியாகி எனத்திருநாமம் பெற்றனர்.

9. தாம்பிரபருணி ஸங்கமத்துக்குத் தெற்கிலுள்ள திருச்செந்தூரிலே விராவாகு தேவருக்காக விசுவரூபதரிசனங்காட்டி விசுவரூபரென்ற பெயரை கொண்டனர்.

10. தண்டகாவனத்தில் கோதாவரிநதிதேசத்தின் தெக்ஷிணபாகத்தில் சீதையைப்பிரிந்த இராமனுக்கு நான்கு வாக்கியங்களை உபதேசித்து ராமன்எனப் பெயரையும் வகித்தனர்.

11. மகேந்திரகிரியின் தென்கிழக்கில் வள்ளியாயத் தெய்வானைநாயகியுடன் குலாவிக்கூடி, காமக்கடவுள் என்னும் பெயரைப்பெற்றனர்.

12 ஜனகாதி முனிவர்களுக்கு குளிகைவித்

தியாநதாரணாவிர்த்தி ஞானவிர்த்தி பிராணாயாமவிர்த்தி என்ற சதுர்விதவிர்த்திகளை யுபதேசித்த யோகி போகசுந்தரர் போகவல்லவர் போகநாதர்- போகீசர- வேதமந்திர சேகரர் என்ற நாமங்களைப்பெற்றனர்.

13 திரிகூடாசலத்தின் ஈசான்னியத்தில் இலஞ்சியில் கபிலர் முதலிய ரிஷிகளுக்கும் வரந்தந்து வரதராஜர் என்ற பெயரையும் யடைந்தனர்.

14 விந்தகபமலையின்மேல்பக்கத்தில் குமாரவனத்திலே யாதவகுலத்திலே பிறந்த சீகரனென்னு மரசன் பிரார்த்தித்தபடியே தமதுகுலத்திற்பிறந்த கோபாலராகிய கண்ணன் கதையை ஆதியோடந்தமாக பத்துதினத்திலே நடித்துக்காட்டி கண்ணனுடையதிருக்கோலத்தையுங் காட்டி, கண்ணன்பெற்ற ஸாயுஜ்யபதவியையும் சீகரனுக்கு கொடுத்து சீகரன்எனப் பெயரையும் பெற்றனர்.

15 சிங்கிபேரி பட்டணத்தில் குகனுக்கு இராமனுடைய கதையினைத்தாம் நாடகமாகநடித்து, இராமனுடைய வடிவக்கோலத்தையுங் காட்டி முத்தியையுங் கொடுத்து வேதமந்திரகுசசுவாமி யென்னும் பேரானந்தநாயகன் என்னும் நாமங்களைப்பெற்றனர்.

16 விருத்தாசலத்திலே வியாழபகவான் புத்திரனாகிய கசனுக்கு அகாரத்தையும் வகாரத்தையும் மூலமூன்று விதமாக உபதேசித்து மாயாமெய்பக்குமரனெனப் பெயரைப் பெற்றனர்,

17 ஏகாம்புரியிலே கபிலமுனிவருக்கு பிருத்வீஞானமந்திரத்தை யுபதேசித்து எல்லாவுயிர்களுக்கும் மந்திரோபதேசஞ்செய்து சகலலோககுரு வெனப் பட்டத்தைக்கொண்டனர்.

18 துங்கபத்திரை நதிக்கு வடபக்கத்தில் கௌசிகமுனிவருக்கு ஞானத்தையுணர்த்தி ஞானதேசிகன் என பெயர்பெற்று எழுந்தருளினரெனப்பலரும் பிதாவாகிய வியாஸமுனிவர்கூறிய ஞானத்தைப்புகட்டுந் திருச்செந்தூரெனுஞ் ஜெயந்திபுரமான்மியத்தை செவிக்கின்பமுறக்கேட்ட அறிவில்லாத முத்தராகிய சுகமுனிவர் ஆசாரியார்க்குமாய் இஜ்ஜெயந்திபுரத்தைத்தரிசிக்கச் செல்லுகையில் வழிமார்க்கத்தில் கேதாரமலையிற் சோமீசுவரரையும், காசிக்ஷேத்திரத்தில் விசாலாக்ஷி விசுவேசரையும் தரிசித்து பிரயாகைநதி அக்ஷயவடம்கயாமுதலிய புண்யஸ்தலங்களைநாடி வெங்கைச்செல்லுகையில் ஜகந்நாதம்வந்துகோதாவரிநதியிலும் ஆகாயகங்கையிலும் தீர்த்தமாடி ஸ்ரீசைலநாதனைப்பணிந்து திருப்பதியையடைந்து குகனைவிர்ந்தத்தையும் வணங்கி காஞ்சிபுரமேகாம்பரநாதனையும் காமாக்ஷியம்மையையும்வரதராஜப்பெருமானையும் லெக்ஷிமியையும்பணிந்துசெல்லுகையில் மங்கலகிரியில் நரசிம்மப்பெருமானையுந்தரித்து திருமுட்டத்தில் வராகவுருவத்திருமாலையும் இலங்கை விருக்ஷத்தையும் நரநாராயணரையும்பணிந்து, நருமதை, துங்கபத்திரை, கண்டகை, கவுசிகை முதலிய நதிகளின் தீர்த்தத்தையும் சிரஸில் புரோக்ஷித்துக்கொண்டு விருத்தாசலத்திலேநடராஜப்பெருமானையும் திருவண்ணா

ப[illegible]திருக்காளத்தி முதலிய க்ஷேத்திரங்களையும் தரிசித்து [illegible] நடராஜப்பெருமானையும் அங்கு நித்தியவாசஞ்செய்கின்ற தேவர்களையும் வணங்கி திருவானைக்காவையடைந்து காவிரிநதியின் வழிசென்று திருவரங்கத்தில் ஸ்ரீரங்கநாதரை சேவித்து பின்னும் காவிரிநதிக்கரையிலுள்ள சிவக்ஷேத்திரங்களையெல்லாந் தரிசித்து வணங்கி, மதுரைமாநகரத்தில் [illegible] திருவிளையாடல் செய்தருளிய சோமசுந்தரமூர்த்தியை பணிந்து பொதியமலையிலே வந்து அகஸ்தியமகாமுனிவர் பாதங்களை வணங்கி தாம்பிரபருணிநதியிலே ஸ்நானஞ்செய்து அந்நதியின் கரையிலுள்ள சிவாலயம் விஷ்ணுவாலயங்களையெல்லாந் தரிசித்து [illegible] [illegible] சேதுவையடைந்து, [illegible] முனிவர் யாகஞ்செய்தகாலத்தில் வந்த [illegible] தீர்த்தஸ்நானஞ்செய்து கடைசியாக ஸ்ரீஜெய[illegible] [illegible] தம் நல்லத்திலே [illegible] வணங்கி பஞ்சகுமாரத்தேவியை வலம் [illegible] ஆகாயத்திலென்றும் [illegible] [illegible] தீர்த்தங்களையெல்லாம் அருக்கியபாத்தி [illegible] கொடுக்கப்பெற்ற முகாம்பி [illegible] ஸ்நானஞ்செய்து அங்குள்ள இருபத்தி [illegible] தீர்த்தங்களிலும் சங்கற்ப ஸ்நானஞ்செய்து ஸ்ரீ [illegible] மனத்துடன் தரிசித்து [illegible] [illegible] ஷோடசோபசாரபூசைசெய்து ஆனந்தக்கண்ணீர் சொரிய [illegible] தோத்திரங்களையும் சிரசின்மேற்குவித்து [illegible] உள்ளன்பொடுங்கி [illegible] [illegible] பின்வருமாறு ஸ்தோத்திரஞ்செய்யலாயினர் :—

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை யாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னிய நிருதர் நீங்காக் கருணைவா ரிதியே போற்றி
யென்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி.

கைலாஸமலையிலிருக்குஞ் சிவபிரான் வணங்குங் கடவுளே! தெய்வயானையுங்குறமாதுங் கலந்த வேதப் பொருளே! கண்களுங் கைகளுந்தனித்தனி பன்னிரண்டாகிய தேவனே! ஆறமதங்களுக்கும் ஆறு திருமுகங்கள் கொண்டநாதனே! தாரகப் பொருளாயுள்ளவனே! சிறிது திருவருளாலே திரிமூர்த்திகளைக்கொண்டு படைத்தல் காத்தல் அழித்தலைச் செய்பவனே! மன்மதபாணங்களினுபாதியைக்கடந்த மாதவர்இருதய கமலத்திலே விளங்கும் ஞானஞூரியனே! அசுரருடல் கிழித்த ஜோதிவேலேந்திய கடம்பனே! எல்லா அறிவிற்குந்தலைமையான தரும சொரூபியே! நான்கு வேதங்களாலும் அறியப்படாத விரம் பொருந்திய வேற்படையுடையனே! பார்வதி தேவிக்குக் குழந்தையாயுள்ளவனே! தற்பரம்பொருளாயிருப்பவனே! மூன்றுலகத்துக்கும் வேண்டிய செல்வப்பொருளைத் தருவதற்கு இலக்குமியைப்போலவும் கல்விப் பொருளைக் கொடுப்பதற்கு ஸரஸ்வதியைப்போலவும் ஞானப்பொருளை யருளுதற்குக் குருவாகவு முள்ளவனே! தத்துவமாகிய அலைகள் மோதி மோகமாகிய முதலையோடு மன்மதனாகிய அரசனைக்கண்டு முழங்கும் ஜனனமாகிய ஸமுத்திரத்தைக் கடப்பதற்குத் திருவடியாகிய தோணியைக் கொடுத்தருளு முத்தனே! ஸிம்மாஸனத்தில் வீராஸனமிட்டிருந்து இடக்கையை

இடப்பக்கத்து முழந்தாளிலே சேர்த்து வலக்கையிலே
சின்முத்திரை தரித்துப் பூரணசந்திரன்போலப் பிர
காசிக்கின்ற வுமது கோலத்தை நினைத்து நெஞ்சிலே
தியானிக்கு மவரை நான்குவேதங்களுந் தேடுஞ் சிவகு
ருவாகச்செய்யு மூல மூர்த்தியே! உமது திருவருளா
கிய அமுதசாகரத்திலே மூழ்குவோருக்குப் பிரமலோ
கத்திலுள்ள ஐசுவரியமும், பிணத்தி னலங்காரம்போல
அருவருக்கத் தெளிவிக்கு முதல்வனே! தேனிறை
ந்த கனியைவிட்டு விஷமுண்பார்போல உம்மைவிட்டு
வேறொருகடவுளைத்தியானித்து மெலியாதபடி யடியா
ர்கட்கெல்லாம் ஆறுமுகத்தியான அமுதத்தினாலே கு
ளிர்ச்சிகொட்டும் ஆதியந்தமில்லாதவரே! ஸர்வலோகைக
க நாயகரே! பிரமன் விஷ்ணு வீரவாகு முதலிய கண
நாதர்கள் வணங்கும் பார்வதிதேவியார் குமாரரே! தே
வர்களுக்கு குருவாயுள்ளவரே! ஞானமாகிய விளக்
கும் சூரிய சந்திரர் முதலாகிய ஒளிப்பொருளும் ஒளிம
ழுங்கும்படி பிரகாசிக்கும் பரப்பிரம வடிவமுமாகிய
முருகக்கடவுளே! இம்மை மறுமைப்பயனுணர்ந்த
ஞானிகளுடைய தியானத்திலே பொருந்தி யிருந்து ம
ற்றையோர் இந்திரியங்களுக்கெட்டாத நுட்பமாகிய
வரே! காமம் க்ரோதம் லோபம் மோகம் மதம் மா
ச்சரியம் எனப்படும் ஆறுக்கும், பிரணவமயகோசம்
அன்னமயகோசம் பிராணமயகோசம் மனோமயகோசம்
விஞ்ஞானமயகோசம் ஆனந்தமயகோசம் எனப்படும்
ஆறுக்கும், தித்தித்தல் புளித்தல் கூர்த்தல் துவர்த்தல்
கார்த்தல் கைத்தல் எனப்படுஞ் சுவை ஆறுக்கும்,
ஜைமினிசூத்திரம் கௌதமசூத்திரம் கணாதசூத்திரம்
கபிலசூத்திரம் பதஞ்சலிசூத்திரம் வியாசசூத்திரம்

எனப்படும்ஷடக்ஷரம் ஆறுக்கும் ஆறுதிருமுகங்களைக்கொண்டவரே! சொல்லுதற்கரிய ஐசுவரியம் வீரியம் புகழ் திரு ஞானம் வைராக்கியம் ஆகிய ஆறுவித குணங்களாலே பகவனாகித் திரிமூர்த்திகளாலேயுலகங்களைச் சிருட்டி ஸ்திதி சங்காரஞ் செய்வித்தருளியவரே! வேதியர்கள் யாகத்திலே விதிப்படி கொடுக்கும் ஆகுதி மந்திரத்தை யுணர்ந்து அவர்களுக்குப் பெருங்கதி கொடுத்தருளுங் குமாரமூர்த்தியே! குகமென்னும் நுட்பப்பொருளாகியவரே! குகைகளையுடைய மலைகளிலிருக்கும் மாதவர் களிருதயமாகிய குகையிலே மனமகிழ்ந்து அன்னப் பறவைபோல இருக்கும் ஆறுமுகங்களையுடையவரே! மலமாகிய வேர்களும், தருமார்த்த காம மோக்ஷமாகிய பழங்களும், மெய் வாய் கண் மூக்குச் செவியென்கிற கப்புகளும், காமம் குரோதம் உலோபம் மோகம் மதம் மாச்சரியம் என்கிற தழைகளும், இரதம் இரத்தம் சுக்கிலம் மூளை தசை எலும்பு தோல் என்கிறசத்ததாதுக்களாகியதோடும் சூக்குமதேகமாகிய பூவும் நவத்துவாரமாகியகணுக்களும் கொண்டு பத்துத்திசைகளிலும் நிழலைச்செய்துதிரியும் ஒவ்வொரு சரீரமாகிய விருக்ஷங்களை யுண்டுபண்ணி வளர்க்குஞ் சிந்துபுரத்தில் வீற்றிருக்குங் குமாரமூர்த்தியே! நான்கு வருணத்தாரும் நான்கு ஆச்சிரமத்தாரும் வணங்க அவர்களுக்கு நாலு திசைகளிலுங் கீர்த்தியை விளங்கச்செய்து தருமம் பொருள் காமம் மோக்ஷம் ஆகியநான்குந்தந்து காக்கின்றவரே! பதினொரு இந்திரியத்தை யுடையவர்களுக்கு எட்டாத மேலான ஆனந்தமயமாகி அவ்விந்திரியங்களுக்குத் தலைமை யுடையவராகிப் பெரிய செபத்தினாலே யிந்திரியங்களைக் கொடுக்கும் பெரியோர்கள் பூசித்து

வணங்குங் கடவுளே ! அப்பாலுக்கப்பாலாகிச் சிறந்த
பரிபூரணமென்று நினைக்கும் பெரியோர்கள் தியானத்தி
லே தம்மைக்காண்பித்து எல்லா வுலகத்தையுமுடைமை
கொண்ட தேவே ! சத்தியவுலக முதலிய எந்தவுல
க வாழ்க்கையும் பயனற்றதென்று நினைக்கத் தம்மு
டைய கருணைவாரிதியிலே மூழ்கச்செய்து அடியே
னை யன்பினாலே யாட்கொண்டவரே ! மோக்ஷவீட்டை
க்கருதி யுமது கீர்த்திக் கோத்திரமாகிய புராணங்களை
யாய்கின்றவரது இருதயமாகிய கோயிலிலே மகிழ்ச்சி
யுடனெழுந்தருளி யிருப்பவரே ! தத்துவ நிருபத்த
ஞ்சு என்பவர்களுக்கும் இருபத்தாறு என்பவர்களுக்
கும் இருபத்தேழு என்பவர்களுக்கும் அந்தத் தத்
துவங்களி னியல்பாய் நின்றவரே ! தொம்பதமாயி
ருக்கின்ற சீடனைத் தற்பதமான பிரமத்தை சம்பந்த
ப்படுத்தி அசியென்னும் ஒன்றதாக்குங் குருமூர்த்தி
யே ! (இந்த மூன்று வாக்கியமும் தத்துவமசி யென்
பதாம்.) பிரயாகையிலே பிரமனாகவும் வைதிகாச்
சிரமத்திலே நாராயணனாகவும் ஏகாந்தத்திலே அரியாகவுந்
துவாரகையிலே கண்ணனாகவும் சிதம்பரத்திலே பராச
க்தியோடிருந்து உலகவாழ்க்கை முற்றுவிக்குங் கலை
களையுணர்கின்றவரும் மதுரையிலே யெல்லாம் வல்லசி
த்தராயிருந்து வேண்டிய விநோதங்கள் செய்கின்றவரு
ம் காசியிலே அன்னபூரணியாகவுமிருந்து இரக்ஷிப்பவ
ராகிய கடவுளே ! காஞ்சியிலே கமபாநதியிலிருந்
து பூசை செய்த காமாக்ஷியாகவும் திருவரங்கத்திலே
நித்திரைசெய்கின்ற நாராயணவடிவமாயு மிருக்கின்ற
கடப்பமாலை யணிந்தவரே ! இங்கே சொல்லிய இவை

கியல்லா மல்லாமல் விராட் புருடவடிவமானவரே! மலைவிமாய்ெறன்று அபேதமாக நினைந்துக் களங்கத் தை யறுக்கின்றவருள்ளக் கமலத்திலே வாசஞ்செய்ப வரே! வேதங்கள் அளவிட்டறியப் படாதவரே! சொல்லுதற்கரிய ஞானவீட்டுக்குப் பிரகாசம்பொருந் திய விளக்குப்போல்பவரே! துன்பத்தைத் தகர்த்தெ ன்னை யடிமைகொண்ட ஆனந்த சொரூபரே! போற்றி போற்றி எனப்பலவாறு நாற்றமும்பேறத்துநிந்து உம் முடைய பாததாமரையைத் தொழுதற்கு வந்தேனென ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்த சுகமுனிவரைக் குமாரக் கடவுள் தமதிருகரங்களாலும் எடுத்து, சுகமுனியே! நீ கருணைவாரிதியாகத் துதித்த ஸ்தோத்திரத்திற்கு மன ங்களித்தனம், பூலோகத்திலே ஜீவன்முக்தனாக இரு ந்த உன்னை தரிசித்தவர்களுக்கும் ஸ்பர்சித்தவர்களுக் கும் மனத்தில் நினைத்தவர்களுக்கும் துதித்தவர்களுக் கும் நான்குவித புருஷார்த்தங்களையும் கொடுப்பாயென ச்சொல்லிய ஷண்முகக்கடவுளை சுகமுனிவர் தமதிரு கர ங்களையுங்குவித்து நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண் டு தமதிருப்பிடஞ்சென்றதன்மேல் ஸ்ரீ ஷண்முகக்கட வுள் ஸ்ரீஜெயந்திரபுரமாகிய திருச்செந்தூரில் இன்று வரையும் தம்மை வணங்கினவர்களுக்கெல்லாம் திருவ ருள் சுரந்திருக்கின்றனர்.

புராண பலன்.

1. இப்புராணத்தைக் கேட்டவர்களுக்கு புரு ஷார்த்தங்கள் நான்குந்தமக்குத்தாமே வந்து சேரும்.

2. இப்புராணத்தை யெழுதி தானங்கொடுத்த வர்கள் பூதானஞ்செய்த பலனையடைவார்கள்.

3. இப்புராணத்தை தானம் வாங்கினவர்களும் தானங்கொடுத்தவர்களடையும் பலனையடைவார்கள்.

4. இப்புராணத்தைப் பூஜை பண்ணினவர்களுக்கு குமாரக்கடவுள் கிருபையினால் தருமார்த்தகாமமோக்ஷமென நான்கு பொருளும் இயல்பே வந்து கூடும்.

5. இப்புராணமிருக்கும் வீடுகளில் இலக்ஷுமி நித்ய வாஸஞ்செய்து கொண்டிருப்பாள்.

6. இப்புராணத்தைப்படிப்பவர்கள் ஏராளமான செல்வமுள்ளவர்களாய் மனைவி மக்கள் முதலிய குடும்ப ஸம்பத்துடன் நெடுங்காலம் வாழ்வார்கள்.

7. இப்புராணத்தை ஸ்ரீ சுப்ரமணியக்கடவுள் ஸந்நிதியில் குரு முன்னாக ஓர் தரம் படிப்பவர்களும் படித்துக் கேட்பவர்களும் அசுவமேதயாகம் பண்ணின பலனை நிச்சயமாய் அடைவார்கள்.

8. இப்புராணத்தை மேற்கண்டபடியே மூன்று தரம் படிப்பவர்களும் படித்துக்கேழ்ப்பவர்களும் யாவராயிருந்தாலும் புத்ர மித்ர களத்ர பௌத்ராதிகளுடனே பரம்பரையாய் குபேரஸம்பத்தையடைவார்கள்.

9. இப்புராணத்திற்கூறிய இருபத்தொன்கு புண்ணியதீர்த்தங்களிலும் நியம நிஷ்டையாசாரங்களுடன் வேதாகமவிதிமுறைப்படி ஸ்நானஞ்செய்து சிவபெருமானையும், விஷ்ணு மூர்த்தியையும், பரப்பிரும்மஸொரூபரான ஸ்ரீ ஆறுமுகக்கடவுளையும், நவவீரர்களையும், வள்ளிநாயகியம்மையையும், தெய்வயானையம்மையையும், மயூரவாகனத்தையும், செவ்வேலாயுதத்தையும்,

அவ்வெளியின் சிகரத்தையும், சந்தனசலத்தையும், திரிசுதந்தரர்களையும் வருஷந்தோறும் இஜ்ஜெயந்திமாநகரமாகிய திருச்செந்தூரின்கண் சென்றுவணங்குபவர்கள் ஸர்வப்பிணிகளினின்றும் நீங்கி அஷ்டைசுவரியங்களையும் யடைந்து மேலான உத்தமபதமும் ஸ்ரீஷண்முகக்கடவுள் ஸாயுஜ்யபதமுமாகிய திருவடித்தாமரை மலர்களைப் பெறுவார்களென சூத முனிவர் நைமிசாரணிய வாஸிகளாகிய முனிவர்களுக்குச்சொல்லியருளினர்.

ஷண்முகன் திருவருள் வாழ்க ஸர்ப்பம்வாழ்க மயில் வாழ்க நகர்வாழ்க வள்ளிநாயகிவாழ்க தெய்வயானையம்மைவாழ்க திரிசுதந்தரர்வாழ்க சேவல்வாழ்க திருச்செந்தூரிலிருப்பவர்வாழ்க வேல்வாழ்க வேலனைச்சார்ந்தோர்வாழ்க முருகனை நினைப்போரும் நினைப்பவர் முன் நிற்போரும்வாழ்க சந்தனசலம் வாழ்க ஸத்தியம்வாழ்க தவம்வாழ்க தருமம்வாழ்க தானம் வாழ்க சாந்தம் வாழ்க புகழ்வாழ்க பொருமை வாழ்க ஜெபம்வாழ்க செந்தமிழ்வாழ்க பூமி வாழ்க ஆகாசம் வாழ்க மேகங்கள் வாழ்க அலைகள் வாழ்க கலைகள் வாழ்க மலைகள் வாழ்க சூரியர் வாழ்க சந்திரர்வாழ்க நக்ஷத்திரங்கள்வாழ்க நவக்கிரகங்கள்வாழ்க இராசிபனிரெண்டும்வாழ்க புராணம்வாழ்க இப்புராணம் யெழுதியவர் வாழ்க அச்சிலடித்தவர்வாழ்க படிப்பவர்கள் வாழ்க படிக்கக்கேட்டவர்கள்வாழ்க பூஜித்தவர்கள் வாழ்க, சுபம். சுபம்.

நிந்தாஸ்துத்யம்—வசனம்.

ஓம் சரவணபவ :— என்சற்குருநாதனே ஷண்

முக போதனே சங்கரன் புதல்வனே: சற்று நீ என்னுடன் வாய்திறந்து பேசினால் தாழ்வுனக்கென்ன செல்லாய், உன் பெருமைதான் குறையுமோ மகிமைக்கிளப்பமோ பெருமை அழிந்துபோமோ சிவனுக்கு குருவென்னும் புகழ்ச்சிக்குறையுமோ சேனைபதிபட்டம் போகுமோ முத்திக்கு வித்தெனும் கீர்த்தியும் மாறுமோ மும்மூர்த்தி முதன்மை போகுமோ, பிரமனைச்சிறையில வைத்த பெருமைக்குறையுமோ மெய்யன்பு பொய்யாகுமோ, உன் தயவு குறைந்ததோ கிருபாக் கடல்சுவறிற்றோ கருணைக்கடைக்கண் பொய்ச்சோ, பாலரென்று மறியாப்பேதை யுள்ளடிமைக்கு பிரத்தியக்ஷமாகுதோதா, என்னை நீ வந்திடல் மனமிடங்கலையா என்னப்பனே உனதடிமையாய், வைவேல் கிருபையா உன் கருணைக்கமுகிலே திருச்செந்தூர் புதல்வா, காத்திடுவாய் சமபதியே பூமடந்தையும் குலமடக்கலம் கனகமயில் கப்பமன்யா, நின்பாதம் பணிந்தேனே சிவகுருநாதனே செந்திநகர் தலையாள்வனே, சர்வநாதனே சங்கரிபுதல்வனே சக்திவேல் முருகையனே, இன்னமும் சொல்லவோ உன்மனது கல்லானதோ இனிச்சொல்லவும் வேண்டாம் ஈசன் திருமைந்தனே மயிலேறும்வள்ளலே உனதாணை எதிரில்வருவாய் எத்தனைபால்வருங்காலம் உபகாரம் இனிமுதல் உன்னடிமையான் சத்தியம சத்தியம் சத்தியம் சத்தியம்.

மங்களம்.

ஓம்கார ரூபமாய் பிரணவஸ்வரூபமாய் வல்லபிநாதனுக்கு மங்களம், ஈசன் தங்கைக்கும் சதுர்முகன் மங்கைக்

கும் மங்களம், காயத்ரீ ஸாவித்ரீஸமேதனுக்கு மங்க ளம், பிருமன் தங்கைக்கும் மாலுடன் மங்கைக்கும் மங்களம, ஹிமயவன் கன்னிக்கும் ஈசனுக்கும் மங்க ளம், ஈசன் தேசிகனுக்கு வள்ளியுடன் மங்களம், ஈ ராறு கரத்திலுதித்த சக்திக்கும் மங்களம், மலரித்விப த்திலுதித்த மங்கைக்கு மங்களம், அண்டத்தைப்ப டைத்தழித்த பாலைக்கு மங்களம், வித்வான்கள் துதி க்கும் வாகீசுவரிக்கும் மங்களம், கருமிகள் துதிக்கும் க்ரியாசக்திக்கும் மங்களம். யோகிகள் துதிக்கும் கு ண்டலீசக்திக்கு மங்களம். நித்தியம் பிர்மஞானத்துக் குப்பாத்திர மாயுதித்த சர்வஞசக்திக்கு மங்களம். வா க்குக்குமனதுக்கு மெட்டாத சச்சிதானந்த நித்யமாய் நிற்கின்ற பிருமத்தை மறைத்த திரோதாயிக்கு மங்க ளம். உலகெலாமயக்க எடுத்த மோகினீ ரூபத்துக்கு மங்களம். உலகெலாமழிக்க எடுத்த காளியுடன் சாமு ண்டிக்கு மங்களம். முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு மங்களம். நாற்பத்தி யெண்ணாயிரம் ரிஷிகள் கின்னரர் கிம்புருடர் கெருட காந்தருவர் உக்ராளுடன் பன்னகா ளுக்கு மங்களம். நந்தி யெம்பெருமானுக்கும் வந்தியு டன்ப்ருங்கிக்கு மங்களம். ஒன்றென்றுரைக்கின் பிரும னுக்கு மங்களம். இரண்டென்றுரைக்கின் ஈசனுக்கும் சக்திக்கு மங்களம். மூன்றென்றுரைக்கின் முக்காலம் முக்குணம் மும்மூர்த்திக்கு மங்களம். நான்கென்றுரை க்கின் சதுர்வேதம் நான்முகனுக்கு மங்களம். ஐந்தெ ன்றுரைக்கின் பஞ்சகன்னி-பஞ்சபூதம-பஞ்சபாணம்- பஞ்சேந்திரியம் பஞ்சாக்ஷரங்களுக்கு மங்களம், ஆறெ

ன்றுரைக்கின் ஆறுமுகனுடன் ஆதாரமாறுக்கும்-சாஸ்திரங்களாறுக்கும் ஷட்கோணங்களுக்கும் மங்களம். ஏழென்றுரைக்கின் ஸப்தஸாகரம்-ஸப்தரிஷி-ஸப்தகன்னி-ஸப்தசுரம் சப்தமேகம் சப்தசமுத்திரம்-கிழமைகளேழுக்கு மங்களம். எட்டென்றுரைக்கின் அஷ்டாக்ஷரம்-அஷ்டகெஜங்கள் அஷ்டதிக்குகள் - அஷ்டவர்க்கங்கள் - அஷ்டைசுவரியம் அஷ்டமாசித்திகளுக்கும் அஷ்டலெக்ஷ்மிகளுக்கும் மங்களம். ஒன்பதென்றுரைக்கின உத்தமநவரெத்தினங்கள்-சுத்த நவவீரர்கள்நவக்ரகங்கள்- நவகோணங்கள் நவதுர்கைகளுக்கும்மங்களம். பத்தென்றுரைக்கின் அச்சுதன் அவதாரம் பத்துக்கும் ஆகாசபாதாளமுடன் திசைபத்துக்கும் மங்களம். பதினொன்றென்றுரைக்கின் கந்தன் படைத்த பதினொருருத்திருக்கும் இந்திரியம்பதினொன்றுக்கும் மங்களம், பனிரெண்டென்றுரைக்கின் துவாதசாதித்தியருக்கும் இராசிபனிரெண்டுக்கும்-மாதம்பனிரெண்டுக்கும் ஸ்கந்தன்படைத்த ஈராறுகரங்களுக்கும் ஈராறுகண்களுக்கும் மங்களம். பதிமூன்றென்றுரைக்கின் பச்சைமால் அச்சுதானந்த கோவிந்தனுக்கிச்சையாய் வைத்திடும் அர்ச்சுனனது திருநாமம் பதிமூன்றுக்கும் மங்களம். பதினாங்கென்றுரைக்கின் ஈரேழு பதினாலுலோகங்களுக்கு மங்களம். பதினைந்தென்றுரைக்கின் நித்தியமுதிக்கும் திதிபதினைந்துக்கும் மங்களம். பதினாறென்றுரைக்கின் பக்தமிருகண்டையர் தவத்திலுதித்த மார்க்கண்டையரெனும் சிரஞ்சீவி ஈரெட்டுவயதுக்கும்மங்களம். கெட்டியாய் நித்தியம் சக்தியைத்துதித்த பக்தருக்கெலா மங்களம். அன்பருக்கெல்லாம் அருளதுஅ

விக்கும் ஆதிபராசக்திக்கு மங்களம். உத்தம உமையெ ன்னும் பெயர் தரித்த உதிரத்திலே உதித்த அத்வைத திலகமாம் இலக்ஷ்மியெனும்பெண்பாலுக்குமங்களம். இஷ்டமாய் இக்கவிதனை கேட்டும் படித்தும் புகழ்ந்தும் வரும் பக்தருக்கெல்லாம் நித்தியானந்த மங்களம்.

சுபம்! சுபம்!! சுபம் !!!

திருச்செந்தூர் ஸ்தலபுராண ஸங்க்ரஹம் முற்றிற்று.

வாணிவிலாஸம் பிரஸ்,
திருநெல்வேலி.